# அரும்பு

இதழ் - 41

**ARUMBU**
Educational Magazine
No. 41



பொது அறிவுச் சஞ்சிகை



# மூளைக்கு வேலை

## விவேக வினாக்கள் ஏழு

(1) ஒருவன் தனது வேலையாளிடம் 100 கண்ணாடி டம்ளர்களைக் கொடுத்து அவற்றைத் தனது நண்பனின் வீட்டில் ஒப்படைக்குமாறு பணித்தான். அதற்குரிய கூலியாக, பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு டம்ளருக்கும் 3 ரூபா வீதம் தருவதாகவும் கொண்டுசெல்லும் போது உடையும் ஒவ்வொரு டம்ளருக்கும் தண்டமாக 9 ரூபா அறவிடப்படும் எனவும் அவன் சொன்னான். இறுதியில் வேலையாளுக்கு 240 ரூபா கிடைத்ததாயின் அவன் கையால் உடைந்துபோன டம்ளர்கள் எத்தனை?

(2) அண்மையில் குமாரினதும் அவன் மனைவி ஜெயாவினதும் திருமணத்தின் 12வது நிறைவு விழா இடம்பெற்றது. அவர்கள் மணம் முடித்தபோது ஜெயாவின் வயது குமாரின் வயதின் 3/4 ஆக இருந்தது. இப்போது அவளது வயது குமாரின் வயதின் 5/6 பங்காக இருப்பின் திருமணத்தின் போது அவர்கள் இருவரதும் வயதுகள் யாவை?

(3) பின்வரும் நட்சத்திர உருவில் காணப்படும் முக்கோணிகள் எத்தனை?



(4) பின்வரும் தொடரில் அடுத்து வரவேண்டிய உறுப்பைக் காண்க.

M, T, W, T, F, S, ......

(5) செவ்வக வடிவமுடைய தாளொன்றில் சித்திரமொன்று வரையப்பட்டிருந்தது. சித்திரத்தின் மொத்தப் பரப்பு 72 சதுர cm ஆக இருந்ததோடு அதன் மேலும் கீழும் 4 cm அகலமான இடைவெளியும் இரு பக்கங்களிலும் 2cm அகலமான இடைவெளியும் விடப்பட்டிருந்தன. அந்தத் தாளின் பரிமாணங்கள் என்னவாக இருக்கும்?

(6) ஊண்டியல் ஒன்றில் சம எண்ணிக்கையான 50 சத, 1 ரூபா, 2 ரூபா நாணயங்கள் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி 700 ரூபாவாயின் ஒவ்வொரு வகையிலும் எத்தனை நாணயங்கள் இருந்தன?

(7) குட்டையான ஒருவரின் மூன்று கால் எட்டுக்கள் (steps) நெட்டையான ஒருவரின் இரண்டு கால் எட்டுக்களுக்குச் சமனாக இருந்தன. இருவரும் ஒரே நேரத்தில் இடது காலைத் தூக்கி வைத்து நடக்க ஆரம்பிப்பார்களாயின் அவர்கள் ஒவ்வொருவரும் எத்தனை எட்டுக்கள் வைத்து நடந்த பின்னர் தமது வலது காலை ஒரே நேரத்தில் தூக்கி வைப்பார்கள்?

*(விடைகள் 11 ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன)*

# அரும்பு

பொது அறிவுச் சஞ்சிகை

இதழ் : **41**

ஆசிரியர் :
ஹாபிஸ் இஸ்ஸதீன்

**ARUMBU**

Educational Magazine (Tamil)

**Issue No: 41**

Editor :
**Hafiz Issadeen**

Published By:
**Issadeen Memorial Educational Foundation**
70, Main Street, Dharga Town-12090
Sri Lanka.
Ph: 034-2270151
E-mail: hafizissadeen@gmail.com
Web site: **www.arumbu.itgo.com**


## உள்ளே . . . .


| | |
|---|---|
| வைரத்தைத் தேடி | 02 |
| விகிபீடியா | 03 |
| பாங்கொக் | 06 |
| கடல் ஆமைகள் | 09 |
| இலங்கையில் ரயில் சேவை . . | 12 |
| லியூக்கீமியாவுடன் ஒரு போராட்டம்-3 | 15 |
| ஆசிய விளையாட்டுப் போட்டிகள் | 20 |
| பேரீச்சை | 23 |
| அல்பேர்ட் ஷ்வைட்ஸர் | 26 |
| பஜாஜ் வாகன உற்பத்தியாளர்கள் | 30 |
| இரைப்பை அழற்சி | 33 |
| கிளேமோர் கண்ணிவெடிகள் | 36 |
| தேங்காய் எண்ணெய் தீங்கானதா? | 39 |
| புரூனை | 42 |
| ஆப்ரஹாம் கோவூர் | 45 |
| பொது அறிவுப் போட்டி – 40 | 48 |


## உங்களுடன் ஒரு நிமிடம். .

அன்பின் வாசகர்களே!

அரும்பின் 41வது இதழ் சற்றுத் தாமதமாகி வெளிவருகின்றது.

அரும்பு இதழை எழுதி வெளியிடுவதில் நாம் எதிர்நோக்கும் பல விதமான பிரச்சினைகள் காரணமாக குறிப்பிட்ட காலத்திற்குள் இதனை வெளியிட முடியாமற் போய்விட்டது.

குறிப்பாக அரும்பின் விற்பனை தொடர்பாகப் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஆரம்பத்திலிருந்து மிக உற்சாகமாகச் செயற்பட்டு வந்த சில விற்பனை முகவர்கள் மனத் தளர்ச்சி அடைந்திருக்கின்றனர். நமது இளம் சந்ததியர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வருவது இதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. அரும்பு போன்ற இதழொன்றின் தேவை மங்கி வருகிறதோ என நாம் யோசிக்க வேண்டியுள்ளது.

நாம் எவ்வளவோ சிரமப்பட்டு வெளியிட்ட பின்னரும் விற்பனை செய்யப்பட்ட இதழ்களுக்கான பணத்தைச் சிலர் தருவதில்லை. இந்த வகையில் இனிக் கிடைக்காது என நாம் கைவிட்ட தொகை ஒரு லட்சம் ரூபாவுக்கும் கூடுதலாகும். இந்நிலையில், தனிமனிதராகத் தொழிற்படும் நாம் என்ன செய்ய முடியும்?

எனவே, இப்படியான நிலை தொடர்ந்தால் அரும்பு தனது 10வது ஆண்டை நிறைவு செய்யும் இந்த வருடத்துடன் மறைந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஒரு தசாப்தம் நின்றுபிடித்ததே பெரிய சாதனையல்லவா!

**ஹாபிஸ் இஸ்ஸதீன்**
ஆசிரியர்

15.03.2007

சிந்தனைக்கு ஒரு சின்னக் கதை

# வைரத்தைத் தேடி . . .

தென் ஆபிரிக்காவிலே வியாபாரி ஒருவன் இருந்தான். எவ்வளவுதான் முயற்சி செய்த போதிலும் அவனால் வியாபாரத்தில் முன்னேற முடியவில்லை. தனிக்கட்டையாக வாழ்ந்த அவன் இதனால் மனம் தளர்ந்து போயிருந்தான். ஒருநாள் அவனது வீட்டுக்கு வந்திருந்த முதியவர் ஒருவரிடம் தனது மனக் குறையைச் சொல்லிப் புலம்பிய அவன் "விரைவில் செல்வம் சேர்க்க வழி ஏதும் இல்லையா?" எனக் கேட்டான்.

"நிலத்திலிருந்து வைரக் கற்களை அகழ்ந்தெடுத்தால் பெரும் செல்வந்தனாகலாம்" என்றார் முதியவர். அதனைக் கேட்டது முதல் அந்த வியாபாரியின் மனதில் வைரம் பற்றிய பேராவலொன்று ஏற்பட்டுவிட்டது. எப்படியாவது வைரக் கற்களை அகழ்ந்தெடுத்துப் பெரும் செல்வந்தனாக வேண்டும் என்று தீர்மானித்த அவன் தன்னிடமிருந்த பண்டங்களை விற்றுப் பணமாக்கிக் கொண்டான். பின்னர் தனது வீட்டையும் தோட்டத்தையும் பார்த்துக் கொள்ளுமாறு ஏழை விவசாயி ஒருவனிடம் ஒப்படைத்து விட்டு அவன் வைரம் தேடிப் புறப்பட்டான்.

மாதக் கணக்காக வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்த அவன் தான் சென்ற இடமெல்லாம் நிலத்தை அகழ்ந்து வைரம் தேடினான். கையிலிருந்த பணம் கரைந்து, அவனது உடலும் இளைத்துப் போனதே தவிர எங்குமே அவனுக்கு வைரம் கிடைக்கவில்லை. என்றாலும் அவனது வைர மோகம் அதிகரித்ததே தவிர சற்றும் குறையவில்லை. இறுதியில் அவன் கடல் கடந்து ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று எல்லாத் திசைகளிலும் பைத்தியம் போல் அலைந்தான். ஒரு துண்டு வைரத்தையாவது தேடிக் கொள்ள முடியாத நிலையில் மனம் உடைந்து போன அவன் பார்ஸிலோனா நதியில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டான்.

சிறிது காலத்தின் பின் அவனுக்கு ஆலோசனை வழங்கிய முதியவர் அவனைத் தேடி அவனது வீட்டுக்குச் சென்றார். அவன் வைரம் தேடி வெளிநாடு சென்றுவிட்டதாக அங்கு குடியிருந்த விவசாயி முதியவரிடம் சொன்னான். ஆந்த வீட்டின் மூலையில் பளபளக்கும் பாறைத் துண்டொன்று இருப்பதைக் கண்ட முதியவர் "இந்தப் பாறை எங்கிருந்து கிடைத்தது? இது அசல் வைரம் அல்லவா!" என்று ஆச்சரியப்பட்டார்.

"நான் பயிர் செய்வதற்காக தோட்டத்து நிலத்தைக் கிண்டிய போது இது கிடைத்தது. இதைப் போன்று நிறையப் பாறைகள் இங்கு நிலத்துக்கடியில் இருக்கின்றன" என்றான் பாமரனான விவசாயி. அவன் கூறியதைக் கேட்ட முதியவர் அவனோடு சென்று தோட்டத்தைக் கிண்டிப் பார்த்தார். அங்கு நிலத்துக் கடியில் வைரப் பாறைகள் எங்கும் பரவிக் கிடந்தன.

வீட்டுத் தோட்டத்தில் வைரப் பாறைகளை வைத்துக்கொண்டு நாடு நாடாக வைரம் தேடி அலைந்து திரிந்த அந்த வியாபாரியைப் போல் நாமும் அலைகின்ற சந்தர்ப்பங்கள் இருக்கத்தானே செய்கின்றன. ■

# இண்டர்நெட் கலைக்களஞ்சியம்



# விகிபீடியா

## (Wikipedia)



விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம், வரலாறு, புவியியல், அரசியல், மொழிகள், கலைகள் போன்ற பல்வேறு துறைகளில் எமக்குத் தேவைப்படும் தகவல்களை எளிதாகவும் ஒழுங்குமுறையாகவும் பெற்றுக்கொள்வதற்குக் கலைக் களஞ்சியங்கள் (Encyclopoedia) உதவுகின்றன.

ஆரம்ப காலம் முதல் கலைக் களஞ்சியங்கள் நூலுருவிலேயே தயாரிக்கப்பட்டுவந்தன. அவற்றில் அகர வரிசைப்படி அமைந்த விடயத் தலைப்புக்களின் கீழ் விளக்கக் குறிப்புக்கள் அல்லது கட்டுரைகள் அடங்கியிருக்கும். பெரும்பாலான கலைக் களஞ்சியங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளை (volumes) கொண்டிருக்கும். *(அரும்பு 3இல் வெளிவந்த கலைக்களஞ்சியங்கள் என்ற கட்டுரையைப் பார்க்க.)*

கடந்த காலத்தில் பல்லூடகக் (multimedia) கலைக்களஞ்சியங்கள் CDக்களில் பதியப்பட்டு வெளியாகின. இவற்றில் எழுத்துக் கட்டுரைகளோடு படங்கள், வீடியோக்கள், ஒலிப்பதிவுகள் என்பனவும் அடங்கியுள்ளன. MS Encarta, Worldbook, Grolier, Britannica போன்ற கலைக் களஞ்சியங்கள் இவ்வாறு CDக்களில் பதியப்பட்டு வெளியாகியுள்ளன.

இந்தப் புதிய நூற்றாண்டில் கலைக்களஞ்சிய வெளியீட்டுத் துறையில் புரட்சிகரமான மாற்றமொன்று ஏற்பட்டது. எவரும் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதும் வெப் தளமொன்றை அடிப்படையாகக் கொண்டதுமான இண்டர்நெட் கலைக்களஞ்சியங்களது தோற்றமே அது. இந்த வகையில் விகிமீடியா பவுண்டேஷன் (Wikimedia Foundation) என்னும் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள விகிபீடியா (Wiki pedia) என்ற இண்டர்நெட் கலைக் களஞ்சியம் பலவகைகளிலும் சிறப்புக்குரியதாகும்.

ஆரம்பத்தில், துறைசார்ந்த நிபுணர்களால் எழுதப்பட்ட ஆக்கங்களைக் கொண்ட Nupedia என்ற இண்டர்நெட் கலைக்களஞ்சியமொன்று இருந்தது. இதன் குறைபாடுகளை நிறைவு செய்யும் ஒரு முயற்சியாகவே விகிபீடியாவின் ஆங்கில வடிவம் 2001 ஜனவரி 15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. Larry Sanger, Jimmy Wales ஆகிய இருவருமே இதனை உருவாக்கினர். இவர்கள் இருவருக்கும் இடையில் உருவான கருத்துவேறுபாடுகள் காரணமாக 2002 மார்ச் 1ம் திகதி விகிபீடியா செயல்திட்டத்திலிருந்து Larry Sanger விலகிக்கொண்டார். எனவே விகிபீடியா கலைக்களஞ்சியத்தின் பிரதம பொறுப்பாளராக இப்போது Jimmy Wales செயற்பட்டு வருகிறார்.

விகிபீடியாவின் சிறப்பியல்புகள் பல உண்டு. முக்கியமாக அத

னைப் பயன்படுத்துகின்ற எவரும் அதில் ஆக்கங்களை எழுதிச் சேர்க்கலாம். அதே போல் எவர் வேண்டுமானாலும் அதிலுள்ள ஆக்கங்களைத் திருத்தியமைக்கலாம். விகிபீடியாவின் வாசகர்களுக்கு இப்படியான சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பது நல்ல விளைவுகளைப் போன்றே தீய விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான சுதந்திரம் ஆக்கங்களை எப்போதும் புதுப்படுத்திக் கொள்வதற்கு வழிவகுப்பதோடு பல்வேறு தலைப்புக்களிலும் புதுப் புது விடயங்கள் சேர்க்கப்படுவதற்கும் காரணமாக அமைந்திருக்கிறது. உலக அரங்கில் இன்று ஏற்படும் ஏதேனுமொரு மாற்றம் பற்றிய தகவல்கள் மறுநாளே விகிபீடியாவில் இடம் பெற்றுவிட முடியுமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட சிலரை மாத்திரம் கொண்ட ஆசிரியர் குழுவொன்று ஆக்கங்களைச் சேர்க்கவும் திருத்தியமைக்கவும் பொறுப்பாக இருந்திருந்தால் இத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்க முடியாது.

ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் மாத்திரம் தொடங்கப்பட்ட விகிபீடியா ஈடுஇணையற்ற பன்மொழிக் கலைக்களஞ்சியமாக இன்று மாறியிருக்கிறது. அதன் முதலாம் ஆண்டு பூர்த்தியாகும் போது 18 மொழிகளில் விகிபீடியா வெளியாகிக்கொண்டிருந்தது. 2002ம் ஆண்டின் முடிவில் 26 மொழிகளிலும் 2003ம் ஆண்டின் இறுதியில் 46 மொழிகளிலும் இதன் பதிப்புக்கள் இண்டர்நெட்டில் வலம் வந்தன. 2004ம் ஆண்டு நிறைவடையும் போது 161 மொழிகளில் விகிபீடியாவின் பதிப்புக்கள் உருவாகியிருந்தன.

தற்போது சுமார் 250 மொழிகளில் விகிபீடியா கலைக்களஞ்சியங்கள் உள்ளன. எனினும் இவற்றில் 171 மொழிகளில் உள்ள பதிப்புக்களே உயிரோட்டமுள்ளனவாகக் காணப்படுகின்றன. இவற்றுள் தமிழ் மொழிப் பதிப்பும் அடங்கும். இவையனைத்திலும் ஆங்கிலத்தில் உள்ளதே மிக விரிவானதாகவும் துரித வளர்ச்சி கொண்டதாகவும் விளங்குகிறது. இதில் சுமார் 1,500,000 கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஜெர்மன் மொழிப் பதிப்பில் சுமார் 500,000கட்டுரைகள் உள்ளன. மேலும் 19 மொழிகளில் உள்ள பதிப்புக்கள் தலா 50,000க்கு மேற்பட்ட கட்டுரைகளைக் கொண்டனவாக இருக்கின்றன.

2005 மார்ச் 18ம் திகதி ஐந்து இலட்சமாவது கட்டுரை ஆங்கில விகிபீடியாவில் சேர்க்கப்பட்டது. 2006 மார்ச் 1ம் திகதி கட்டுரைகளின் தொகை பத்து இலட்சம் என்ற புள்ளியை அடைந்தது. 2006 நவம்பர் 25ம் திகதி பதினைந்து இலட்சமாவது கட்டுரை அதில் சேர்க்கப்பட்டது ஆங்கில விகிபீடியா எப்படியான வேகத்தில் வளர்ச்சியடைகின்றது என்பதை இதிலிருந்து நாம் ஊகித்துக்கொள்ள முடியும்.

எனினும் எவரும் எழுதலாம், எவரும் திருத்தலாம் என்ற திறந்த கோட்பாடு காரணமாக விகிபீடியாவில் பலவிதமான குழறுபடிகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் இருக்கிறது. சிலர் தமது சொந்தக் கருத்துக்களையும் கொள்கைகளையும் திணிக்கும் வகையில் கட்டுரைகளை எழுதவும் மாற்றியமைக்கவும் முற்படுகின்றனர். இன்னுஞ் சிலரோ தீய நோக்கோடு நாசகார வேலைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள்

பொய்யான, தவறான, ஆபாசமான, அவதூறான அல்லது இன மதத் துவேஷங்களைத் தூண்டிவிடக்கூடிய கட்டுரைகளையும் தகவல்களையும் விகிபீடியாவில் சேர்த்துவிடுகின் றனர். இதனால் விகிபீடியாவில் உள்ள தகவல்கள் எந்தளவுக்கு நம்பக மானவை என்பதைத் தீர்மானித் துக்கொள்ள முடியாதிருக்கிறது.

ஒரு கட்டுரையை நாம் பார்ப் பதற்கு முன்னர் யார் அதைத் திருத்தி அமைத்தார்களோ என்பது எமக்குத் தெரியாத காரணத்தால் விகிபீடியா கட்டுரைகளின் நம்பத்தகவு சந்தேகத் திற்குரியதாகவே இருக்கும். எனி னும் விகிபீடியாவின் தரத்தையும் நடுநிலைக் கோட்பாட்டையும் பேணுவதற்காக உழைக்கும் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் எந்நேர மும் இந்த விடயத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்து நாசகார வேலைகளிலிருந்து அதனைப் பாது காக்க உழைத்துக்கொண்டிருக்கின் றனர்.

நாம் அரும்பு கட்டுரைகளுக்கா கத் தகவல்களைப் பெறும் போது அடிக்கடி விகிபீடியாவை உசாவிக் கொள்கிறோம். எனினும் மேற் சொன்ன நிலைமை காரணமாக விகிபீடியாவிலிருந்து பெறப்பட்ட சர்ச்சைக்குரிய தகவல்களை வேறு தகவல் மூலங்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்த்துக் கொள்ளவே எப்போ தும் முயற்சிக்கின்றோம்.

விகிபீடியாவை நடாத்திவரும் விகிமீடியா பவுண்டேஷன் இலாப நோக்கமற்ற ஓர் அமைப்பாகும். இது Wikitionary என்ற இண்டர் நெட் அகராதிச் செயற் திட்டமொன் றையும் 2002 டிசம்பர் முதல் நடத்தி வருகிறது. அத்தோடு மேற்கோள் கூற்றுக்களின் தொகுப்பைக் கொண் ட 'Wikiquote', இலவச நூல் பதிப் புக்களைக் கொண்ட 'Wikibooks' போன்ற இன்னும் பல இலவச இண்டர்நெட் செயற்திட்டங்களை யும் அது ஆரம்பித்து நடத்தி வரு கிறது.

ஆபாசப் படங்களையும் வீடி யோக்களையும் பரப்புவதற்கும் ஆட் களை ஏமாற்றிப் பணம் பறிப் பதற் கும் இண்டர்நெட்டைப் பலரும் பயன்படுத்தி வரும் இந்தக் காலத்தில் இப் படியான அறிவு வளர்க்கின்ற பாரிய திட்டம் ஒன்றினை ஆரம்பித்து நடாத்தி வரும் Jimmy Wales பாராட்டுக்கு உரியவரே.



"புவியில் வாழும் ஒவ்வொரு வருக்கும் அவரவரது சொந்த மொழி யில் உயர் தரமுடைய கலைக்களஞ் சியமொன்றை உருவாக்கி வழங் குவதே விகிபீடியாவின் நோக்கம்" என்கிறார் ஜிம்மி வேல்ஸ். இன்று இண்டர்நெட்டில் அதிகமானோ ரால் அணுகப்படுகின்ற முதல் 15 வெப்தளங்களுள் ஒன்றாக விகி பீடியா இருப்பது குறிப்பிடத்தக்கது.

விகிபீடியாவின் வெப்தளம் http://www.wikipedia.org/ என்ப தாகும். இதன் சேவை வழங்கும் பிரதான கம்பியூட்டர் serverகள் ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள் Tampa நகரிலும் மேலதிக serverகள் நெதர்லாந்தின் அம்ஸ்டர்டாம், தென்கொரியாவின் ஸியோல் ஆகிய நகர்களிலும் வைக் கப்பட்டுள்ளன. ■

உலக நகர்கள்

# பாங்கொக்

**(Bangkok)**



**தா**ய்லாந்து தேசத்தின் மிகப் பெரிய நகராகவும் தலைநகராகவும் விளங்கும் பாங்கொக், தாய்லாந்து வளைகுடாவுக்கு அருகே சாயோ ப்ராயா நதியின் கிழக்குக் கரையில் அமைந்திருக்கிறது. தாயி (Thai) மொழியில் இந்நகரின் சரியான பெயர் *குருங் தெப்*(Krung Thep) என்பதாகும். சுமர் 200 ஆண்டுகளுக்கு மேலாக இப்பெயர் பயன்படுத்தப் பட்டு வருகின்ற போதிலும் வெளி நாட்டவர்கள் தொடர்ந்தும் பாங் கொக் என்ற பெயரையே உபயோகித்து வருகின்றனர். ஆனால் உள் நாட்டவர்களோ மாநகரின் ஒரு மாவட்டத்தைக் குறிப்பதற்கே இப் பெயரைப் பயன்படுத்துகின்றனர்.

இன்றைய உலகின் மிகப் பெரிய நகர்களின் வரிசையில் 27வது இடத்தை பாங்கொக் வகிக்கிறது. அத்தோடு வானுயர் மாடிக் கட்டடங்களை நிர்மாணிப்பதிலும் இந் நகர் உலக அரங்கில் முன்னணியில் இருக்கிறது. பாங்கொக்கின் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாக அது தென் கிழக்கு ஆசியாவின் பிரதான பொருளாதார மற்றும் நிதிச் சேவைகள் மையமாக மாறி வருகின்றது.

முற்காலத்தில் தாய்லாந்து தேசம் ஸயாம் (Siam) என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தது. அப்போது *அயுத்தயா* என்ற நகரே நாட்டின் தலைநகராக விளங்கியது. இந்நகருக்குச் சேவை வழங்கும் வர்த்தக மற்றும் துறைமுகப் பட்டினமாகவே பாங்கொக் உருவாகியது. அக்காலத்தில் இது *பாங்க் மாகொக்* என்றே அழைக்கப்பட்டது. 1767இல் *அயுத்தயா* நகரை பர்மா கைப்பற்றிக் கொண்டது. எனவே *தொன்புரி* (Thonburi) என்ற புதிய தலைநகரொன்று நதியின் மேற்குப் பகுதியில் நிறுவப்பட்டது. (தொன்புரி இன்று பாங்கொக் மாநகரின் பகுதியொன்றாக விளங்குகிறது). முதலாவது ராமா என்ற மன்னர் 1782இல் தனது அரச மாளிகையை நதியின் கிழக்குக் கரையில் நிர்மாணித்து அந்நகருக்கு *குருங் தெப்* (தேவதைகளின் நகர்) எனப் பெயர் சூட்டினார்.

குருங் தெப் என்பது இம்மாநகரின் முழுப்பெயரின் முதலிரண்டு சொற்களையும் கொண்ட குறுக்கப் பெயராகும். இதன் முழுப் பெயர் 23 சொற்களைக் கொண்டது. உள்ளூர்ப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இந்த முழுப்பெயர் சொல்லிக்கொடுக்கப் படுகின்றது. எனினும் அப்பெயரின் சரியான பொருளை எல்லோராலும் விளங்கிக் கொள்ள முடியாது. ஏனெனில் அதிலுள்ள சில சொற்கள் இப்போது வழக்கில் இல்லாதவை. பெரும்பாலான தாய்லாந்து நாட்டவர்கள் ஒரு பிரபல இசைப்பாடலின் மூலமாகவே தலைநகரின் முழுப் பெயரை நினைவில் நிறுத்திக் கொள்கின்றனர்.

உலகிலுள்ள இடப் பெயர்களுள் மிக நீளமானது இதுவே என கின்னெஸ் (Guinness) சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இன்று பாங்கொக், தாய்லாந்து நாட்டுப் பொருளாதாரத்தின் கேந்திர நிலையமாக விளங்குகிறது. 2005இல் அந்நகரின் மொத்த உள்ளூர் உற்பத்தி 220 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது தாய்லாந்தின் மொத் தத் தேசிய உற்பத்தியின் 43% எனக் கணிக்கப்பட்டுள்ளது. பாங்கொக் நகரவாசிகளின் தலாவருமானம் வருடத்திற்கு 20,000 டொலர்கள் வரை உயர்ந்திருக்கிறது. எனினும் பல் வேறு மக்கள் கூட்டத்தினரிடையே வருமானத்தில் பாரிய ஏற்றத்தாழ் வுகள் காணப்படுகின்றன.

பாங்கொக் நகரில் சுமார் 7 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். தற்காலிகமாக வசிப்பவர்கள், தினமும் வந்து போவோர் ஆகியோர் இதில் அடங்கவில்லை. பாங்கொக்வாசிகளில் பாதிக்கு மேற்பட்டோர் ஏதேனுமொரு வகையில் சீன வழித் தோன்றல்களாகவே இருக்கின்றனர்.

இங்கு வெளிநாட்டவர்களும் பெருந்தொகையினராக வசிக்கின்றனர். இவர்களுள் சீனப் பிரஜைகள், ஜப்பானியர்கள், இந்தியர்கள், அமெரிக்கர்கள், ஐரோப்பியர்கள், தென் கொரியர்கள், அராபியர்கள், மலேஷியர்கள் போன்றவர்களே அதிகமாக உள்ளனர்.

சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் அங்கு 6 இலட்சம் பேருக்கு மேல் வாழ்கின்றனர். இவர்கள் கம்போடியா, மியன்மார், ரஷ்யா, உக்ரெய்ன், பாகிஸ்தான், இந்தியா, நைஜீரியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்களாவர். பதியப்பட்டுள்ள பாங்கொக் மக்களில் 92% பௌத்தர்களும் 6% முஸ்லிம்களும் 1% கிறிஸ்தவர்களும் அடங்குவர். பாங்கொக் நகரில் சுமார் 400 பௌத்த ஆலயங்களும் 55 மஸ்ஜித்களும் 10 கிறிஸ்தவ தேவாலயங்களும் 2 இந்துக் கோவில்களும் 2 யூத ஆலயங்களும் ஒரு சீக்கிய வழிபாட்டுத் தலமும் உண்டு.

தாய்லாந்தின் விசேட நிர்வாகப் பிரிவொன்றாகவே பாங்கொக் திகழ்கிறது. நாட்டின் ஏனைய 75 மாகாணங்களையும் போலன்றி பாங்கொக்வாசிகள் பொதுத் தேர்தல் மூலம் தமது ஆளுனரைத் தெரிவுசெய்து கொள்கின்றனர். 2004ம் ஆண்டு இடம்பெற்ற ஆளுனர் தேர்தலில் அபிராக் கொஸயோதின் என்பவர் பாங்கொக் ஆளுனராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாங்கொக் நகர் 50 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டங்கள் 154 உப நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் ஒரு மாவட்ட அதிபரினால் நிர்வகிக்கப்படுகிறது. அத்தோடு தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் மாவட்ட சபைகள் மாவட்ட அதிபருக்கு ஆலோசனை வழங்கும் அமைப்புக்களாகத் தொழிற்படுகின்றன.

தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் பாங்கொக் நகர சபையே நகரின் வரவு செலவு, மாநகரச் சட்ட விதிகளை அமுலாக்கல் போன்றவற்றுக்குப் பொறுப்பாக இருக்கிறது. பாங்கொக் மாநகர சபைக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் கடைசியாக 2006 ஜூலை 23ம் திகதி இடம் பெற்றன.

பாங்கொக் நகரில் அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் பல செயற்படுகின்றன. இவற்றுள் சூலாலொங்கோர்ன், தம்மஸாத், மஹி

டோல், கஸெட்ஸார்ட் என்பன தாய் லாந்தின் மிகப் பழைய உயர்கல்வி நிறுவனங்களாகும்.

ஆரம்ப காலத்தில் பாங்கொக் பகுதியில் பொருந்தொகையான கால்வாய்களைக் கொண்ட வலை யமைப்பொன்று காணப்பட்டது. இவற்றினூடாகப் படகு மூலமே போக்குவரத்து மேற்கொள்ளப்பட் டது. இதன் காரணமாக பாங்கொக் நகருக்கு கிழக்கின் வெனிஸ் (Venice of the East) என்ற சிறப்புப் பெயர் முன்னர் வழங்கப்பட்டிருந்தது. இப் போது இக்கால்வாய்களுள் பெரும் பாலானவை மூடப்பட்டு அவற்றின் மீது வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதியாக உள்ள சில கால்வாய்களில் படகுப் போக்குவரத்து இடம் பெறு வதோடு அவற்றில் மிதக்கும் சந்தை களும் (Floating Markets) நடாத்தப் படுகின்றன. தாலிங் சான் என்ற மாவட்டத்திலுள்ள மிதக்கும் சந்தை புகழ்பெற்றதாக விளங்குகிறது.

அண்மைக்காலத்தில் பெருந் தொகையான மேம்பாதைகளும் நெடுஞ்சாலைகளும் ரயில்பாதை களும் அமைக்கப்பட்டிருந்தாலும் நகரின் போக்குவரத்து நெரிசல் எரிச் சலூட்டுவதாகவே இருக்கிறது. சில வேளைகளில் ஒரு மணித்தியாலத் தில் ஒரு மீட்டர் தூரமேனும் நகர முடியாத அளவுக்குச் சில வீதிகளில் நெரிசல் ஏற்பட்டுவிடுகிறது. 1999 இல் இருவழிப் பாதைகளைக் கொண்ட Sky train என்னும் உயரத் தில் செல்லும் ரயில் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விமானப் போக்குவரத்தில் ஆசி யாவிலே மிக முக்கியமான இட மொன்றை பாங்கொக்கின் Don Mueang சர்வதேச விமான நிலையம் வகித்துவந்தது. சுமார் 80 விமான சேவை நிறுவனங்களின் விமானங் கள் அங்கு வந்து போயின. உலகின் மிக பிஸியான விமான நிலையங்கள் வரிசையில் 18வது இடத்தை அது பிடித்திருந்தது. 1914ம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட இது உலகிலேயே மிக மூத்த சர்வதேச விமான நிலையங் களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது பாங்கொக் நகருக்கு 30 km வடக் கே அமைந்துள்ளது.

பாங்கொக்கின் புதிய சர்வதேச விமான நிலையமான சுவன்னாபூம் (Suvarnabhumi Airport) 2006 செப் டம்பர் 28ம் திகதி திறக்கப்பட்டது. இதன் சிறப்பான கட்டடக் கலையம் சங்கள் காரணமாக இது தாய்லாந் தின் பெருமைக்குரிய சின்னமாகக் கருதப்படுகிறது. உலகின் இரண்டா வது மிகப்பெரிய பிரயாணிகள் கட்ட டத் தொகுதியை இது கொண்டுள் ளது. ( இந்த வகையில் முதல் இடத் தை ஹொங்கொங்கின் Chep Lap Kok விமான நிலையம் வகிக்கின் றது). சுவன்னாபூம் விமான நிலையத் தின் 134m உயரமுள்ள கட்டுப்பாட் டுக் கோபுரம் உலகிலேயே மிக உயர்ந்ததாகும்.

உலகின் புகழ்பெற்ற உல்லாசப் பிரயாணத் தலங்களுள் ஒன்றான பாங்கொக் ஆசியாவிலே மிகக் கூடு தலான உல்லாசப் பிரயாணிகள் வரு கை தரும் இடமாகத் திகழ்கிறது. சாயோ ப்ராயா நதியின் இரு கரை களிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் காணப்படு கின்றன.

இவற்றுள் மூன்று அரச மாளி கைகள் அடங்கும். தற்போதைய அரச குடும்பத்தினர் வசிக்கின்ற சித்ரலதா மாளிகை 1 km சதுர பரப் பளவுள்ள வளவினுள் அமைந்துள் ளது. ■

# கடல் ஆமைகள்





(Sea Turtles)

ஆர்க்டிக் சமுத்திரம் தவிர்ந்த உலகின் ஏனைய எல்லாச் சமுத்திரங்களிலும் கடல்களிலும் கடல் ஆமைகள் காணப்படுகின்றன. பொதுவாக வெப்பவலயக் கடற் பகுதிகளிலேயே இவை பெருமளவில் சஞ்சரிக்கின்றன. சில கடலாமை இனங்கள் சமுத்திரங்களுக்கிடையில் பிரயாணம் செய்வனவாக உள்ளன. Flatback என்ற இனத்தைச் சேர்ந்த ஒருவகைக் கடலாமைகள் அவுஸ்திரேலியாவின் வட கரைகளில் மாத்திரமே வாழ்கின்றன.

ஆமைகளைக் குறிப்பதற்கு ஆங்கிலத்தில் tortoise, turtle, terrapin என மூன்று சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. தரைவாழ் ஆமைகளே tortoises என அழைக்கப்படுகின்றன. இவற்றின் ஓடு மேற்குவிவாக வளைந்திருக்கும். இவற்றுக்குக் கால்கள் இருக்கும்.

கடலிலும் வேறு நீர் நிலைகளிலும் வாழும் ஆமையினங்கள் turtles எனப்படுகின்றன. இவற்றின் ஓடுகள் மிகச் சிறிதளவே மேற்குவிந்து காணப்படும். அத்தோடு இவற்றின் அவயவங்கள் நீந்துவதற்கு உதவக்கூடிய வகையில் நீண்டு தட்டையான துடுப்புக்களாகத் (flippers) திரிபு அடைந்து காணப்படுகின்றன.

நன்னீரில் வாழும் சிறிய ஆமையினங்களே terrapins எனப்படுகின்றன. இவை கால்களைக் கொண்டவை. எனினும் நீந்துவதற்கு உதவும் வகையில் கால் விரல்களுக்கு இடையில் இணைப்புச் சவ்வுகள் காணப்படும். இவற்றினால் நிலத்திலும் நடமாடித் திரிய முடியும்.

கடல் ஆமைகள் ஏனைய நீர்வாழ் ஆமைகளிலிருந்தும் தரைவாழ் ஆமைகளிலிருந்தும் பல வகைகளில் வித்தியாசப்படுகின்றன. ஏனைய ஆமை இனங்களால் தேவையான போது பாதுகாப்புக்காகத் தமது தலையையும் அவயவங்களையும் தம் ஓட்டுக்குள் இழுத்து மறைத்துக்கொள்ள முடியும். ஆனால் கடல் ஆமைகளால் இவ்வாறு தலையையும் அவயவங்களையும் உள்ளே இழுத்துக்கொள்ள முடியாது.

ஆமை வகைகள் அனைத்தும் முள்ளந்தண்டுள்ள விலங்குகள். இவை றெப்தீலியா (Reptilia) என்னும் வகுப்பைச் சேர்ந்த நகருயிர்கள். Leatherback என்ற வகையைத் தவிர்த்து ஏனையை அனைத்து ஆமை வகைகளும் வன்மையான ஓட்டைக் கொண்டுள்ளன. ஆமைகளின் முள்ளந்தண்டு எலும்புகளும் விலா எலும்புகளும் ஓட்டின் உட்புறத்தோடு ஒட்டி இணைந்துள்ளன. எனவே ஆமைகளால் அவற்றின் ஓட்டுக்குள் இருந்து வெளியேற முடியாது.

கடல் ஆமைகளுள் வித்தியாசமான ஏழு வகைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவை கெம்பின் ரிட்லீ

(Kemp's Ridley), தட்டை முதுகு (Flatback), பச்சை (Green), ஒலிவ் ரிட்லீ (Olive Ridley), பெருந்தலை (Loggerhead), பருந்து அலகு (Hawk's bill), தோல் முதுகு (Leatherback) என்ற பெயர்களால் அழைக்கப்படு கின்றன.

இவற்றுள் Leatherback தவிர்ந்த ஏனைய ஆறு வகைகளும் Chelonoidea என்ற விலங்குக் குடும்பத் தைச் சேர்ந்தவை. Leatherback வகைக் கடல் ஆமைகள் Dermochelydiae என்ற குடும்பத்தைச் சேர்ந்தவை. இவ்விலங்குக் குடும்பத்தின் தனிப் பிரதிநிதிகளாக இவை திகழ்கின்றன.

Leatherback கடலாமைகள் ஏனைய ஆறு வகைகளையும் விடப் பருமனில் மிகப் பெரியவை. இவை சுமார் 2m நீளமும் 1 - 1.5 m அகலமும் கொண்டனவாக வளரலாம். இவ் வகை ஆமையொன்றின் நிறை 450 kg முதல் 600 kg வரை இருக்கக் கூடும். Leatherback ஆமைகளின் ஓடானது தோல் (Leather) போன்ற சவ்வொன்றினால் போர்த்தப்பட் டிருக்கிறது. இதனாலேயே இவற் றுக்கு இப்பெயர் வழங்கப்பட்டுள் ளது. இவை Jelly fish என்னும் கடல் உயிரினங்களை மாத்திரமே உணவா கக் கொள்கின்றன.

பொதுவாக ஆமைகளின் உடற் கூற்று அமைப்பின் அடிப்படையி லேயே வெவ்வேறு இனங்கள் பிரித்தறியப்படுகின்றன. குறிப்பாகத் தலையின் முன்பகுதியில் காணப் படும் செதில்களின் தன்மை, ஓட்டின் மேற்புறத்தை ஆக்கியுள்ள எலும்பு போன்ற கூறுகளின் வடிவமும் எண் ணிக்கையும், கீழ்ப்புற ஓட்டின் அமைப்பு போன்றவற்றில் கடல் ஆமை இனங்களிடையே வேறுபாடு காணப்படுகின்றது.

சுமார் 30 வருடங்கள் முதிர்ச் சியடைந்த பின்னர் முதிர் நிலையை அடைந்த பெண் கடலாமைகள் முட் டையிடுவதற்காகக் கரையை நோக் கிச் செல்கின்றன. பொதுவாகத் தான் முட்டையிலிருந்து வெளிவந்த அதே கடற்கரையைத்தான் ஒவ்வொரு பெண் ஆமையும் தேடிச் செல்லும்.

கடல் ஆமைகளுக்கு நேரம், இடம் என்பன பற்றி உணர்ந்து கொள்ளும் ஆற்றல் மிகையாக உண்டு. புவியின் காந்தப் புலத்தை அவற்றால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. தாம் தேடிச் செல்லும் இடத்தை நோக்கித் தம் மை வழிநடத்த அவை புவிக்காந்தப் புலத்தைப் பயன்படுத்திக் கொள் வதாக நம்பப்படுகின்றது.

பெரும்பாலான கடலாமை இனங்கள் முட்டையிடுவதற்காகக் கரையை நோக்கித் தனித்தனியாக வே செல்கின்றன. எனினும் ரிட்லீ இனங்களைச் சேர்ந்த கடலாமைகள் நூற்றுக்கணக்கில் கூட்டமாகச் சேர்ந் தே கடற்கரையை அடைகின்றன. Kemp's Ridley இனத்தைச் சேர்ந்த வை ஒரே கடற்கரையை நோக்கிக் கூட்டமாகப் பகல்வேளையில் செல் வது வழக்கம்.

பெண் ஆமைகள் முதிர்ச்சி யடைந்த பின்னர் 2 முதல் 4 வருடங் களுக்கு ஒரு தடவை இவ்வாறு முட்டையிடச் செல்கின்றன. இப்படி முட்டையிடும் காலத்தில் 4 முதல் 7 வரையான தொகுதிகளாக முட் டைகள் இடப்படுகின்றன. கரையை அடையும் ஆமைகள் தம் பின் அவ யவங்களால் குழிகளைத் தோண்டி அவற்றுள் முட்டைகளை இடுகின் றன. பின்னர் முட்டைகளை மண் ணால் மூடி மறைத்துவிட்டுக் கடலுக் குத் திரும்பிவிடுகின்றன. ஒரு குழி

யில் 70 முதல் 190 வரையிலான முட்டைகள் இடப்படலாம். இவ்வெண்ணிக்கை இனத்துக்கு இனம் வித்தியாசப்படும்.

முட்டைகளுள் சில கருக்கட்டாதவையாக இருக்கும். ஏனைய கருக்கட்டிய முட்டைகளிலிருந்துதான் ஆமைக்குஞ்சுகள் வெளிவரும். முட்டைகள் பொரிப்பதற்குச் சுமார் 2 மாதங்கள் பிடிக்கும். பொரித்து வெளிவரும் குஞ்சுகள் மண்ணைக் கிளறிக்கொண்டு வெளியே வந்து சமுத்திரத்தை நோக்கிச் செல்கின்றன. எனினும் கூட்டமாக வெளிவரும் ஆமைக் குஞ்சுகளைப் பிடித்துத் தின்பதற்காக இரைகௌவிகள் தயாராக நிற்பதனால் பொரிக்கப்படும் குஞ்சுகளில் மிகச் சொற்ப எண்ணிக்கையே (சுமார் 1%அளவு) தப்பிப் பிழைத்துக் கடலை அடைய முடிகிறது.

கடற்கரைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள், மாசடைதல் என்பன காரணமாக ஆமைகள் முட்டையிடுவதற்குரிய இடங்கள் அருகி வருகின்றன. அத்தோடு ஆமை முட்டைகளைத் திட்டமிட்டுத் திருடுதல், இறைச்சிக்காகக் கடல் ஆமைகளை (குறிப்பாக Green வகையை) வேட்டையாடுதல் போன்ற மனிதத் தலையீடுகள் கடல் ஆமைகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளன. மீன்பிடி வலைகளில் சிக்கியும் ஆயிரக்கணக்கான கடலாமைகள் தினமும் இறக்கின்றன. அத்தோடு Hawk's bill வகை அவற்றின் அலங்காரமான ஓட்டுக்காக வேட்டையாடப்படுகின்றன.

இப்படியான அச்சுறுத்தல்கள் காரணமாக Kemp's Ridley இனம் முற்றாக அழிந்துபோகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. அத்தோடு Leatherback வகையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இனமாகக் கருதப்படுகின்றது.

இப்போது இலங்கை உட்படப் பல நாடுகளில் கடலாமைகள் இடும் முட்டைகளைத் தேடி எடுத்துப் பாதுகாப்பான இடங்களில் பொரிக்கச் செய்து வெளிவரும் குஞ்சுகளைச் சில நாட்களுக்குப் பேணி வளர்த்துப் போதிய பாதுகாப்புடன் கடலுக்குள் செல்லவிடும் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் கூட்டாகவும் தனியாகவும் இம்முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இம்முயற்சிகள் காரணமாகக் கடல் ஆமை இனங்கள் பலவற்றை முற்றான அழிவிலிருந்து பாதுகாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடலாமை இனங்களின் விலங்கியற் பெயர்கள்:

Kemp's Ridley = *Lepidochelys kempi*

Olive Ridley = *Lepidochelys olivacea*

Loggerhead = *Caretta caretta*

Hawk's bill = *Eretmochelys imbricata*

Leatherback = *Dermochelys coriacea*

---

## மூளைக்கு வேலை—விடைகள்

1). 5 டம்ளர்கள்

2). குமாருக்கு 24 வயது; ஜெயாவுக்கு 18 வயது

3). மொத்தம் 20 முக்கோணிகள்

4). S (இவை கிழமை நாட்களின் பெயர்களின் முதலெழுத்துக்கள்)

5). 20 cm உயரம் 10 cm அகலம்

6). ஒவ்வொரு வகையிலும் 200 நாணயங்கள்

7). அதே ஒழுங்கில் தொடர்ந்து நடந்தால் அவர்கள் ஒரு போதும் தமது வலது காலை ஒரே நேரத்தில் தூக்கி அடியெடுத்து வைக்க மாட்டார்கள்.

# இலங்கையில் ரயில் சேவையின் ஆரம்பம்



(Early History of Sri Lanka Railway)

கண்டி இராச்சியம் 1815இல் வீழ்ச்சியுற்ற பின்னர் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஆங்கிலேயப் பயிர்ச் செய்கையாளர்கள் முண்டியடித்துக்கொண்டு வந்தனர். எமது மலைநாட்டின் மிதமான காலநிலையும் வளமான மண்ணும் அவர்களைக் கவர்ந்திழுத்தன. ஏற்றுமதிக்கு உகந்த வர்த்தகப் பெறுமானமுள்ள பயிராக அவர்கள் கோப்பியையே தெரிவு செய்தனர். காலப்போக்கில், தாம் உற்பத்தி செய்யும் கோப்பியை மலைநாட்டிலிருந்து கொழும்புக்குக் கொண்டுவருவதற்கான தரமானதும் துரிதமானதுமான போக்குவரத்து முறையொன்றின் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தலாயினர்.

1845ம் ஆண்டாகும் போது கோப்பி மோகம் உச்சநிலையை அடைந்திருந்தது. அரச காணிகளை 50 சதத்திற்கு ஒரு ஏக்கர் என்ற வகையில் மலிவாகப் பெற்று ஆங்கிலேய ஆளுனரும் அவரது அதிகாரிகள், இராணுவத்தினர், நீதிபதிகள், மத குருமார் போன்றோரும் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

எனவே இவர்களது உற்பத்தியைக் கொழும்புக்குக் கொண்டுவருவதற்காக ரயில் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. இதற்கென 1845இல் Ceylon Railway Company (CRC) என்ற பெயரில் கம்பனியொன்று இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக Philip Anstruther என்பவர் இருந்தார்.

கம்பனியின் பொறியியலாளரான தோமஸ் ட்ரேன் (Thomas Drane) என்பவர் இலங்கைக்கு வந்து நில அளவைகளை மேற்கொண்டு கொழும்பிலிருந்து கண்டிவரை ரயில் பாதை அமைப்பதற்கு 850,000 ஸ்டர்லிங் பவுண் செலவாகும் என மதிப்பீடு செய்தார். இத்தொகை மிக அதிகமானது எனக் கருதப்பட்டதால் 258,000 பவுண் செலவில் கொழும்பில் இருந்து அம்பேபுஸ்ஸ வரை (54 km) மாத்திரம் ரயில் பாதையை அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், கொழும்பிலிருந்து கண்டி வரை 800,000 பவுண் என்ற குறைந்த தொகையில் ரயில் பாதையை அமைப்பதற்கு கம்பனியும் இலங்கை அரசும் 1856இல் உடன்படிக்கை செய்துகொண்டன. இத்தொகையும் அதிகம் எனக் கருதிய கோப்பிச் செய்கையாளர்கள், ரயில் பாதை தொடர்பாக மீளாய்வொன்றைச் செய்யுமாறு இங்கிலாந்து அரசாங்கத்திடம் மனுச்செய்தனர்.

இதன் விளைவாக, செலவு குறைந்த மாற்றுப் பாதைகளின் சாத்தியம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகக் கப்டின் மூர்ஸம் என்பவர் 1857இல் இங்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவரின் ஆய்வின் படி கொழும்பு-கண்டி ரயில் பாதைக்கான ஆறு மாற்று வழிகள் சிபாரிசு செய்யப்பட்டன. அவற்றில் ஒன்றுக்கான சராசரிச் செலவு 856,557 பவுண்கள் எனவும் மதிப்பிடப்பட்டது.

கருங்கற குன்றுகளினூடாகச் சுரங்கப் பாதைகள் அமைத்தல் மலை அடிவாரங்களில் பாறைகளை குடைதல், பள்ளத்தாக்குகளுக்கு மேல் செங்குத்தான காப்பரண்களை அமைத்தல், நீர் நிரம்பியுள்ள சேற்று நிலங்களை நிரப்புதல், பாலங்களை நிர்மாணித்தல் போன்ற பல்வேறு சிரமமான வேலைகள் நிறைவேற்றப் பட வேண்டி இருந்ததால் செலவைக் குறைப்பது சாத்தியமல்ல என்பது சுட்டிக் காட்டப்பட்டது. எனவே சிபாரிசு செய்யப்பட்ட மாற்று வழி களுள் ஒன்று தெரிவு செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கம்பனியின் ஒப்பந்தக்காரரும் பொறியியலாளருமான W.T. Doyne என்பவர் ரயில் பாதை அமைக்கும் பணியைப் பொறுப்பேற்றார். 1858 ஆகஸ்ட் 3ம் திகதி, அப்போதைய ஆளுனர் ஸர். ஹென்றி வோர்ட் கொழும்பில் மரதான ரயில் நிலை யம் இப்போது அமைந்துள்ள இடத் தில் நிலத்தை வெட்டி நிர்மாண வேலைகளைக் கோலாகலமாக ஆரம்பித்து வைத்தார்.

எனினும் உத்தேசிக்கப்பட்ட செலவில் வேலையை முடிக்க முடி யாது என்பது விரைவில் நிரூபண மாகியது. களனி நதியின் மீதாகப் பாலம் அமைப்பதும் ரம்புக்கனை முதல் கடுகன்னாவை வரையுள்ள ஏற்றத்தில் தண்டவாளங்களைப் பொருத்துவதும் பெரும் சவால் களாக அமைந்திருந்தன. எனவே மேலதிக நிதி தேவை என Doyne விண்ணப்பித்தார்.

இதன் விளைவாக 1861இல் கம்பனியுடனான ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டது. கம்பனி இட்ட மூலதனத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு இலங்கை அரசு ரயில் பாதை அமைக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டது. இதற்காக Ceylon Government Railway (CGR) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. பின்னர் ரயில் பாதை அமைக்கும் வேலைக்காக விலை மனுக்கள் கோரப்பட்டன. இறுதியில், ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த W.F.G. Faviell என்ற ஒப்பந்தக்கார ருக்கு ரயில் பாதை அமைக்கும் வேலை ஒப்படைக்கப்பட்டது.

CGRஇன் பிரதம பொறியிய லாளராக நியமிக்கப்பட்டிருந்த Sir G.L. Molesworth என்பவருடன் இணைந்து மூன்று வருடங்களில் அம்பேபுஸ்ஸ வரையிலான ரயில் பாதையை அமைப்பதில் Doyne வெற்றி பெற்றார்.

களனி நதி மீதான 244m (800 அடி) நீளமான பாலம் பல துண்டங் களாக நிர்மாணிக்கப்பட்டது. (இப் பாலத்தின் ஒரு பகுதி 1872 செப்டம் பர் 20ம் திகதி பெய்த கடும் மழையின் போது ரயில் என்ஜின் ஒன்றுடனும் அதன் பணியாளர் குழுவுடனும் முறிந்து விழுந்தது. தற்போதுள்ள களனி ரயில் பாலம் 1902இல் பூர்த்தி யாக் கப்பட்டது.)

முதலாவது ரயில் என்ஜின் 1864 ஜனவரியில் கப்பல் மூலம் இலங் கைக்குக் கொண்டுவரப்பட்டது. இங்கிலாந்தின் பர்மிங்ஹம் நகரி லுள்ள R. Stephenson & Co என்ற நிறு வனத்தால் தயாரிக்கப்பட்ட அந்த கொதிநீராவி என்ஜின் எரிபொரு ளாக நிலக்கரியைப் பயன்படுத்தி யது. ஆரம்பத்தில், ரயில் பாதை அமைப்பதற்குத் தேவைப்படும் பொருட்களை உரிய இடத்திற்கு எடுத்துச் செல்ல இந்த என்ஜின் பயன் படுத்தப்பட்டது.

இலங்கையின் ரயில் சேவை யைத் தொடங்கி வைக்கும் வகையில் கொழும்பிலிருந்து அம்பேபுஸ்ஸ

வரை சென்ற முதலாவது ரயில் வண்டியையும் இந்த என்ஜினே இழுத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது. (இந்த என்ஜின் 1926 வரை சேவையில் இருந்ததாகக் கூறப்படுகிறது)

மேற்சொல்லப்பட்ட முதலாவது ரயில் பயணத்தின் போது பிரதம பொறியிலாளர் Molesworth என்ஜின் சாரதியாகச் செயற்பட்டார். இந்தக் கன்னிப் பயணத்தின் போது பிரதம அதிதியாக இங்கிலாந்தின் Brabant பிரதேச கோமகன் (Duke of Brabant) பிரயாணம் செய்தார். (இவர்தான் பிற்காலத்தில் இரண்டாவது லியோ போல்ட் என்ற பெயரில் பெல்ஜியத்தின் மன்னராக முடிசூட்டப்பட்டார்).

இவர் வெயாங்கொடையில் இருந்து அம்பேபுஸ்ஸ வரையும் அங்கிருந்து திரும்பிக் கொழும்பு வரையும் அந்த ரயில் வண்டியில் பிரயாணம் செய்தார். அப்போதைய இலங்கை ஆளுனரான சார்ள்ஸ் மெக்கார்த்தி சுகவீனமுற்றுத் தாய்நாடு திரும்பியிருந்ததால் அவர் சார்பில் நாட்டைத் தற்காலிகமாக நிருவகித்து வந்த மேஜர் ஜெனரல் ஓ பிரயன் (O'Brien) என்பவரும் பிரதம அதிதியோடு பிரயாணம் செய்தார். (தற்போதுள்ள அம்பேபுஸ்ஸ ரயில் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். பழைய ரயில் நிலையம் இப்போது உபயோகிக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளது).

கொழும்பிலிருந்து கண்டி வரையிலான முதலாவது ரயில் சேவை 1867 ஏப்ரில் 26ம் திகதி நடாத்தப்பட்டது. கொழும்பிலிருந்து கண்டி வரை பத்து இடங்களில் குன்றுகளைக் குடைந்து சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டன. இவற்றுள் முதலாவது சுரங்கப் பாதை 83.5 m (274 அடி) நீளமானது. இது மீரிகமையில் இருக்கிறது. இவற்றுள் மிக நீண்டது 333.75m (1095 அடி) நீளமுடையது. (பேராதனையிலிருந்து பதுளை வரை 36 சுரங்கப் பாதைகள் உள்ளன. இவற்றுள் மிக நீளமானது ஹட்டனுக்கும் கொட்டகலைக்கும் இடையில் உள்ள Poolbank என்னும் சுரங்கப் பாதையாகும். இது 561.5 m (1842 அடி) நீளமானது).

கொழும்பிலிருந்து களுத்துறை தெற்கு வரையிலான ரயில் பாதை 1879இல் பூர்த்தியாக்கப்பட்டது. எனினும் களுத்துறையில் இருந்து அதனை அளுத்கமை வரை நீடிக்க 11 வருடங்கள் பிடித்தன. 1890இல்தான் அளுத்கமைக்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ■

## சிரிக்காதது ஏன்?

ஒரு கம்பனியின் அதிபர் தனது பணியாளர்களுக்கான கூட்டம் ஒன்றிலே உரையாற்றிக் கொண்டிருந்தார். அவரது பேச்சுச் சுவாரஷ்யமாக இல்லாத போதிலும் ஊழியர்கள் இடையிடையே கைதட்டி ஆரவாரம் செய்தனர். அவர் சொன்ன ஜோக்குகள் உப்புச் சப்பற்றவையாக இருந்த போதிலும் ஊழியர்கள் வயிறு குலுங்கச் சிரித்தனர். ஆனால் ஒருவன் மட்டும் அவரது ஜோக்குகளைக் கேட்டுச் சிரிக்காமல் சும்மா இருந்தான்.

அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவர், "ஏன் கொஞ்சமும் சிரிக்காமல் இப்படி 'உம்'மென்று இருக்கிறாய்?" என மெதுவாகக் கேட்டார்.

"நான் ஏன் சிரிக்க வேண்டும்? அடுத்த வாரம் நான் இந்தத் தொழிலை விட்டு விலகப் போகிறேனே!" என்று பதிலளித்தான் அந்த ஊழியன்.

# லியூக்கீமியாவுடன் ஒரு போராட்டம் - 3

## (A Struggle with Leukaemia - Part 3)

மகனைத் தாக்கியிருப்பது A.L.L. வகை லியூக்கீமியா என்பதை எலும்பு மச்சைச் சோதனையின் மூலம் நிச்சயப்படுத்திக் கொண்ட பின்னர் அதற்குரிய சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிகிச்சையைத் தொடங்க முன்னர் Dr. சேகர் பட்டீல் என்னைத் தனியாக அழைத்துத் தாம் மேற்கொள்ளப் போகும் சிகிச்சைச் செயன்முறையின் பல்வேறு படிகளையும் விபரமாக விளக்கினார். நோயை அடக்குவதற்காகச் செய்யப்படும் முதற்கட்டச் சிகிச்சை (induction therapy) தொடர்ந்து ஆறு வாரங்களுக்குச் செய்யப்படும் எனவும் அதன் பின்னர் இரண்டாம் கட்டத்தைத் தொடங்க முன்னர் ஒருவாரகால இடைவேளையில் நாம் இலங்கைக்குச் சென்று விட்டு வரலாம் எனவும் சொன்னார்.

ஆறுவாரங்கள் தொடர்ச்சியாக மருத்துவ மனையில் தங்கியிருப்பதை நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது. போதாக்குறைக்கு, வெளியிலிருந்து எவ்விதமான உணவையும் அறைக்குள் கொண்டு வரக்கூடாது எனவும் மகனுக்குத் தேவையான உணவை அறைக்குள்ளேயே சமைத்துக் கொடுக்கும் படியும் வைத்தியர் உத்தரவு போட்டுவிட்டார். மருத்துவமனைக் 'கண்டீனில்' இருந்து கூட உணவு பெற்றுக்கொள்ள வேண்டாம் எனக் கூறிவிட்டார்.

மகனுக்குத் தொற்றுநோய்கள் ஏற்படாமல் தடுப்பதே அவரது நோக்கமாக இருந்தது. ஏனெனில் லியூக்கீமியாவுக்கு எதிராக வழங்கப்படப் போகும் மருந்துகள் உடலின் நோயெதிர்ப்பு ஆற்றலை நலிவாக்கக் கூடியனவாக இருந்தன. என்ன சிரமம் வந்தாலும் வந்த காரியத்தை நிறைவேற்றி முடிப்போம் என்ற திட சித்தத்துடன் நாம் மருத்துவமனை வாழ்க்கைக்குத் தயாரானோம்.

முதலில் சமையல் செய்வதற்குத் தேவையான பாத்திரங்கள், உபகரணங்கள், ரைஸ்குக்கர் போன்றவற்றை வாங்கிக் கொண்டோம். எல்லாவற்றையும் அறையினுள் ஒழுங்காக வைத்திருப்பதே பெருங்கஷ்டமாக இருந்தது.

இதற்குள், ஆரம்பத்தில் வழங்கப்பட்ட தீவிர சிகிச்சையின் காரணமாக இர்ஷாதின் காய்ச்சல் முற்றாகவே நீங்கிப் போயிற்று. அவரும் உற்சாகமாக எழுந்து நடமாடத் தொடங்கினார். எனினும் அவரது நிறை 83kg இலிருந்து 69kg வரை குறைந்திருந்ததனால் உடல் தளர்ச்சியுற்றுக் காணப்பட்டார்.

இடையில் Dr. அஜய் குமார் வந்து நலம் விசாரித்து விட்டுச் சென்றார். அவர் எம்மைப் பார்ப்பதற்காக அடிக்கடி வந்து செல்வதைக் கண்டு தாதிமார்களும் ஏனைய ஊழியர்களும் எம்மீது அதிக கரிசனை காட்டத் தொடங்கினார். தாதிமாருள் பெரும்பாலானோர் கேரளாவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மலையாளமும் கன்னட மொழியும் ஆங்கிலமும் பேசினார்கள். அவர்களுள் சிலர் நன்றாகத் தமிழிலும் பேசினர். சிற்றூழியர்கள் பெரும்பாலும் கன்னடர்களாகவே இருந்தனர். அவர்கள் பேசுவது எதுவும் எமக்குப் புரியவில்லை. எனினும் எப்படியோ கருத்துப் பரிமாறிக் கொண்டோம். காலப் போக்கில் கன்னட மொழியை ஓரளவு புரிந்துகொள்ளவும் முடியுமாகியது.

எமது பகுதிக்குப் பொறுப்பாக இருந்த தாதி சங்கீதா என்பவர். நல்ல

அனுபவசாலி. மிக்க அன்போடு பழகினார். அவருக்குத் தமிழ் நன்றாகத் தெரியும். எனினும் எமக்குக் கன்னடம் கற்பிக்கும் நோக்கோடு அடிக்கடி அம்மொழியில்தான் பேசுவார். நாம் அவரோடு ஆங்கிலத்தில் தான் உரையாடினோம். அறையைச் சுத்தம் செய்வதற்காக தினமும் நாலைந்து தடவைகள் ஊழியர்கள் வருவார்கள். அவர்களும் எம்மீது பரிவு காட்டிப் பழகினர். குடும்பத்தினரையும் உறவினர்களையும் பிரிந்து கடல் கடந்து சென்றிருந்த எமக்கு மருத்துவ மனையில் பணி புரிந்த ஊழியர்கள்தான் உறவினர்களாகவும் நண்பர்களாகவும் திகழ்ந்தனர்.

லியூக்கிமியாவுக்கான chemotherapy என்னும் இரசாயன சிகிச்சைகள் இடைவிடாது குறித்த ஒழுங்கில் மேற்கொள்ளப்பட்டுவந்தன. ஒவ்வொரு சிகிச்சைக்கு முன்பும் பின்பும் பல்வேறு குருதிச் சோதனைகள் நடாத்தப்பட வேண்டி இருந்தது. மகனின் ஈரலும், சிறுநீரகங்களும் மருந்துகளை எந்த அளவுக்குச் சகித்துக் கொள்கின்றன என்பதை ஆராய்வதே முக்கிய நோக்கமாக இருந்தது. அத்தோடு குருதியின் அமைப்பில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்துக் கொள்ளவும் இச்சோதனைகள் உதவின.

சில மருந்துகளை உடலினுள் செலுத்திய பின் ஈரலின் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படுவது அவதானிக்கப்பட்டது. அப்படியான சந்தர்ப்பங்களில் குருதியில் ஈமோகுளோபினின் அளவு வீழ்ச்சியடையத் தொடங்கும். அத்தகைய நிலையில் குருதி வழங்க வேண்டி (blood transfusion) ஏற்படும். ஒரு நாள் இர்ஷாதின் ஈமோகுளோபின் பெருமானம் 8.5க்கு வீழ்ச்சியுற்றது. உடனடியாக அவருக்குக் குருதி வழங்க வேண்டும் என வைத்தியர் சொன்னார். அடுத்த வீதியில் உள்ள இரத்த வங்கிக்குச் சென்று O+ வகைக் குருதி வாங்கிவருமாறு அவர் கூறினார்.

நானும் பதற்றத்தோடு புறப்பட்டேன். பாதை தவறிப் பல திசைகளிலும் அலைந்தேன். 'இரத்த வங்கி எங்கே இருக்கிறது?' என்று பலரிடம் ஆங்கிலத்தில் கேட்டேன். கன்னட மொழியில் ஏதேதோ சொன்னார்கள். நான் எதுவும் புரியாமல் விழித்தேன். கால்போன போக்கில் அலைந்து தேடிய போது 'Blood Bank' என்ற ஓர் அறிவித்தல் பலகையைக் கண்டு அத்திசையில் ஓடினேன். வாகன நெரிசலில் பாதைகளைக் கடப்பதே சிரமமான காரியமாக இருந்தது. அது ஒரு தொண்டர் நிறுவனத்தின் இரத்த வங்கி. எனது கையிலிருந்த கடிதத்தைப் பார்த்த ஒரு பெண் உத்தியோகத்தர் 'உங்கள் புற்றுநோய் மருத்துவ மனையின் இரத்த வங்கிக்குத் தான் நீங்கள் போக வேண்டும்' என்றார்.

எப்படியோ சிரமப்பட்டு அந்த இரத்த வங்கிக்குச் சென்ற போது அங்கு O+ வகைக் குருதி இல்லை எனக் கை விரித்து விட்டார்கள். "வேண்டுமானால் 'சாகர் அபொல்லோ' மருத்துவமனையில் விசாரித்துப் பாருங்கள்" என்றார் அங்கிருந்த ஒருவர். ஏமாற்றத்தோடும் கவலையோடு திரும்பிச் செல்லும் போது மீண்டும் அந்தத் தொண்டர் நிறுவன இரத்த வங்கிக்குள் நுழைந்து எனது பரிதாப நிலையை ஆங்கிலத்தில் விளக்கினேன். "ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. எப்படியாவது எனது மகனைக் காப்பாற்ற இரத்தம் தாருங்கள்" என்று கெஞ்சினேன். அங்கிருந்தவர்கள் உணர்ச்சியற்றவர்கள் போல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அப்போது உட்புறமிருந்து வந்த முதிய உத்தியோகத்தர் ஒருவர் எனது நிலையைக் கண்டு மனமிரங்கி "உங்கள் மகனுக்கு நாம் இரத்தம் தருவோம். உடனடியாக அவரது இரத்த மாதிரியொன்றை எடுத்து வாருங்கள்" என்றார்.

நானும் கவலை நீங்கியவனாக மருத்துவ மனைக்கு ஓடினேன். அங்கு, நான் திரும்பி வரத் தாமதமாவதைக் கண்ட மருத்துவர்கள் வேறு வைத்திய சாலை ஒன்றிலிருந்து O⁺ இரத்தத்தைத் தருவிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்குறிய கட்டணத்தை மட்டும் நான் செலுத்தினால் போதும் என்றார்கள். விரைவில் தேவையான இரத்தம் கொண்டுவரப்பட்டு மகனுக்கு வழங்கப் பட்டது. நானும் நிம்மதியடைந்தேன்.

இவ்வாறு பல்வேறு சிக்கல்களுக் கும் சோதனைகளுக்கும் மத்தியில் சிகிச்சை தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வந்தது. இர்ஷாதின் இரண்டு கை களும் பல இடங்களில் துளைக்கப்பட்டு ஊசி மருந்துகளும் இரத்தமும் வழங் கப்பட்டன. எல்லா வேதனைகளையும் மிகப் பொறுமையோடு அவர் சகித்து வந்தார். சில நேரங்களில் வேதனை தாங்க முடியாமல் முணகுவார். கண்களில் நீர் கசியும். ஆனால் நானும் இம்ரானும் பயந்துவிடக் கூடாது என்பதற்காகத் தனது வேதனையை வெளியே காட்டிக் கொள் ளாமல் இருந்தார்.

Dr. பட்டாச்சார்ஜீ தினமும் காலை யில் தவறாது வந்து இர்ஷாதை உற்சாகப் படுத்தி தைரியமூட்டிச் செல்வார். "இது லியூக்கீமியாவில் மிக இலேசான வகை. இப்போது உங்களுக்குச் சுகம். இனிப் பயப்படத் தேவையில்லை. தைரியமாக இருங்கள். விரைவில் ஸ்ரீலங்காவுக்குப் போய்விடலாம்" என்றெல்லாம் அடிக் கடி கூறுவார். அவரது சிரித்த முகமும் ஆறுதல் வார்த்தைகளும் எமக்கு அரு மருந்தாய் அமைந்தன.

இர்ஷாத் தைரியம் இழக்காமலே யே இருந்தார். Dr. சேகர் பட்டீல் வந்து "ஹாய் இர்ஷாத். இன்று எப்படியிருக் கிறீர்கள்?" என்று கேட்கும் போதெல் லாம் "நான் நன்றாக இருக்கிறேன்" என் று உற்சாகத்துடன் கூறியபடி புன்சிரிப் புடன் எழுந்து உட் கார்ந்து விடுவார். ஒரு நாளும் வைத்தியரிடம் தனது வருத்தங்கள் பற்றிப் புகார் செய்யமாட்டார். அவரது தைரியத்தையும் இன்முகம் காட்டிப் பேசும் தன் மையையும் வைத்தியர்களும் தாதிமாரும் அடிக்கடி என்னிடம் பாராட் டியிருந்தனர்.

நாட்கள் மெதுவாகவே நகர்ந்தன. எனினும் அதிகாலையில் எழும்பியது முதல் நித்திரை கொள்ளும் வரை ஓய்வாக இருக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆடைகளைச் சலவை செய்தல், சமைப் பதற்குத் தேவையான பொருட்களை வாங்கக் கடைக்குச் செல்லல், சமைத்தல், தினமும் வைத்தியர் எழுதித்தரும் துண்டு களுக்கு ஏற்ப மருந்து வாங்க பாமஸியில் தவமிருத்தல் என நேரம் பிஸியாகக் கழிந்து கொண்டே இருந்தது. மாலை வேளைகளில் நேரம் கிடைத்த போது வெளியே சென்று 2-3 கிலோமீட்டர் தூரம் நடந்தேன். பெங்களூரின் புகழ்பெற்ற 'லால்பாக்' (Lalbag) என்ற பூங்கா சிறிது தூரத்தில் இருந்தது. சில நாட்கள் அது வரை சென்று திரும்பினேன். மகனுக்குச் சுகம் கிடைத்த பின் அவரோடு அப்பூங் காவுக்குச் சென்று ஒரு மாலைப் பொழு தைக் கழிக்க வேண்டும் என நினைத்துக் கொண்டேன். ஆனால் அது நிறைவேறா மலே போயிற்று.

நாளுக்கு நாள் மகனின் உடல் நிலை நல்ல முன்னேற்றத்தைக் காட்டியது. அவரது உடல் மருந்துகளுக்கு நல்ல விளைவைக் காட்டுவதாகவும் விரைவில் குணம் கிடைத்துவிடும் எனவும் வைத் தியர் கூறிவந்தார். இடையில் ஒரு தடவை Dr. அஜய் குமார் எம்மைப் பார்க்க வந்திருந்த போது இர்ஷாத் தொடர்பாக மேற்கொள்ளப் போகும் சிகிச்சை முறை கள் பற்றி Dr. சேகர் பட்டீலிடம் கேட் டார். அவர் அறைக்குள் வரும் போது அவரைச் சூழ ஒரு பட்டாளமே வந்து விடும். வைத்தியர்கள், பிரதம தாதிமார், நிர்வாக ஊழியர்கள் எனப் பலர் அவ ரோடு வருவார்கள். தாம் மேற்கொள்ளப்

போகும் சிகிச்சைகள் பற்றி Dr. சேகர் பட்டீல் எல்லோர் முன்னிலையிலும் விளக்கினார்.

முதற்கட்ட சிகிச்சை முடிந்ததும் எலும்புமச்சைச் சோதனை செய்து பார்ப்பது; நோய் அடங்கிப் போயிருந் தால் ஒரு வார இடைவெளியின் பின்னர் இரண்டாம் கட்ட இரசாயனச் சிகிச் சையை மேலும் 6 வாரங்களுக்கு மேற் கொள்வது; அதன் பின்னர் மூன்றாம் கட் டமாக 8 வாரங்களுக்கு Methotroxate என்ற மருந்தைக் கொண்டு மிகை அளவு (High dose) சிகிச்சையைச் செய்வது என தனது திட்டத்தை விளக்கினார் Dr. சேக்கர் பட்டீல். மூன்றாம் கட்ட சிகிச்சையைப் பற்றி அவர் கூறியபோது "Methotroxate கொடுக்கப் போகிறீர்களா? நாம் இவரைக் காப்பாற்ற வேண்டும் (We must rescue him)" எனப் பதற்றத்தோடு சொன்னார் Dr. அஜய் குமார். "பயப்படத் தேவையில்லை ஸார். அந்தச் சிகிச்சை யைப் பெற்றவர்கள் நல்ல முறையில் அதைத் தாங்கிக் கொண்டார்கள்" என்று அவரை ஆறுதல் படுத்தினார் Dr. சேகர் பட்டீல்.

இந்தச் சம்பாஷணை எனது மனதில் ஒரு திடுக்கத்தை ஏற்படுத்தியது. சிகிச் சையின் காலம் அவர்கள் ஆரம்பத்தில் கூறிய மாதிரி 6-8 வாரங்களாக அல்லாது பல மாதங்களுக்கு நீளப்போகிறதே என்ற கவலையும் ஆதங்கமும் ஒரு புறம். வழங் கப்படும் சிகிச்சையிலும் உயிராபத்து இருக்கிறதே என்ற பீதி மறுபுறம். எனி னும் எதுவும் எமது கைகளில் இல்லை; எல்லாம் இறைவன் நாடியபடியே நடக் கும் என நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டேன்.

பெரும்பாலும் sms மூலமே குடும் பத்தாருடன் தகவல் பரிமாறிக் கொண் டோம். இடையிடையே தொலைபேசி யில் பேசினோம். இர்ஷாத் தனது மனை வியுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டார். செய்தி கேள்விப்பட்டு



Dr. சேகர் பட்டீலுடன் இர்ஷாத்

வெளிநாடுகளிலுள்ள எனது நண்பர்கள் பலர் என்னோடு தொடர்பு கொண்டு ஆறுதல் கூறினர். அத்தோடு பண உதவி செய்யவும் பலர் முன்வந்தனர். ஐரோப் பிய நண்பர்கள் பலர் கூட்டாகச் சேர்ந்து சுமார் 7 இலட்சம் ரூபாவை எனது வங் கிக் கணக்குக்கு அனுப்பிவைத்தனர். ஒல்லாந்திலுள்ள நண்பர் Elizabeth எனது வீட்டுக்குச் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு நிதியுதவியும் வழங் கியிருந்தார். எவ்வளவு நல்ல மனிதர்கள் உலகத்தில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்துகொள்ள இந்தச் சோதனை காலம் எனக்கு உதவியது.

மருத்துவமனையில்தான் எமக்கு 2006ம் ஆண்டு உதயமாகியது. ஜனவரி முதல் வாரமாகும் போது இர்ஷாதின் உடல் நிலை வழமைக்குத் திரும்பி விட்டது. அதற்குள் இம்ரானும் சமையல் செய்வதற்குப் பழகிவிட்டார். எனவே நான் தனியே வீட்டுக்குச் சென்றுவரத் திட்டமிட்டேன். தமக்குத் தனியே சமா ளிக்க முடியும் என இருவரும் உறுதியளித் தனர். எனவே குடும்பத்தவர் எவருக்கும் அறிவிக்காமல் ஜனவரி 7ம் திகதி இரவில் விமானமேறி இலங்கை வந்தேன். நான் வீட்டை நெருங்கும் வரை இர்ஷாத் நான் அனுப்புவது போல் sms அனுப்பி வீட் டிலுள்ளவர்களைக் குழப்பிக் கொண் டிருந்தார். நான் வீட்டை நெருங்கியதும்

அவர் போன் பண்ணி "வாப்பா வந்திருக்கிறார். கதவைத் திறவுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். என்னைக் கண்டு அனைவரும் தாங்க முடியாத மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர்.

இர்ஷாதின் உண்மை நிலையை நேரடியாக விளக்குவதே எனது நோக்கமாக இருந்தது. நாம் தொலைபேசியில் பேசும் போது உண்மையான பிரச்சினைகளை மறைத்துக் கொள்வதாகக் குடும்பத்தினர் பயந்திருந்தனர். எனது திடீர் விஜயம் எல்லோர் மனதிலும் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. இரண்டு நாட்கள் வீட்டில் தங்கிவிட்டு ஹஜ்ஜுப் பெருநாளைக்கு முதல் நாள் பெங்களூர் திரும்பினேன். அதிகாலை 4.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்ட நான் காலை பத்து மணிக்கு மருத்துவமனையில் இருந்தேன். வாய்க்குச் சுவையாகச் சில உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லவும் வாய்ப்புக் கிட்டியது.

நான் திரும்பிச் சென்ற அதேநாள் இர்ஷாதுக்கு எலும்பு மச்சைச் சோதனை செய்யப்பட்டது. அன்று மாலை சோதனை அறிக்கை வந்த போது வைத்தியர்களும் நாமும் பெருமகிழ்ச்சி அடைந்தோம். இர்ஷாதின் லியூக்கீமியா முற்றாக அடங்கிப் போயிருந்தது. எலும்பு மச்சையில் அதற்கான அறிகுறி சிறிதும் தென்படவில்லை. நோய் முற்றாக அடங்கிப் போகும் இந்நிலையை Remission என்பார்கள். நோய் முற்றாகச் சுகமாகிவிட்டது என இதன் மூலம் முடிவு செய்ய முடியாது. எந்நேரமும் திரும்பிவரலாம் என்ற பயம் இருந்தது. எனவே சிகிச்சையைத் திட்டமிட்டபடி தொடரவேண்டியிருந்தது.

ஆனால், நானோ சிறுபிள்ளை போல் சந்தோஷத்தில் குதித்தேன். இர்ஷாதுக்கு நோய் குணமாகிவிட்டது என எல்லோருக்கும் sms அனுப்பினேன். ஆனால் விடயமறிந்த சிலர் எனது கூற்றை சந்தேகத்துடன் தான் ஏற்றுக் கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் இறைவன் எம் அனைவரதும் பிரார்த்தனைகளையும் ஏற்றுக்கொண்டு என் மகனுக்கு விரைவில் குணமளித்துவிட்டான் என்ற உறுதியான நம்பிக்கை வலுப்பெற்றிருந்தது. (தொடரும்)





எமது வெளியீடுகள்:

## அரும்பு ஜோக்ஸ்

இதுவரை அரும்பில் வெளிவந்துள்ள நகைச்சுவைத் துணுக்குகளின் தொகுப்பு. 108 பக்கங்கள்.

பிரதியொன்றின் விலை ரூபா 75.00. தபாலில் பெற விரும்புவோர் ரூபா 90.00 ஐ மனியோடர் மூலம் அனுப்புதல் வேண்டும்.

## நோய்கள்




அரும்பு கட்டுரைத் தொகுப்பு நூல்

அரும்பு இதழிலே வெளிவந்த மனித நோய்கள் தொடர்பான 30 கட்டுரைகள் தொகுக்கப்பட்டு அழகிய வண்ண அட்டையுடன் நூலொன்றாக வெளியிடப்பட்டுள்ளது.

100 பக்கங்கள் கொண்ட இந்நூல் தரமான 70gsm தாளில் அச்சிடப்பட்டிருக்கிறது.

பிரதியொன்றின் விலை ரூபா 125.00. தபாலில் பெற விரும்புவோர் மனியோடர் மூலம் ரூபா 140.00, அனுப்புதல் வேண்டும்.

# ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

## (The Asian Games)



கடந்த 2006 டிசம்பர் மாத முதற் பாதியில் கத்தர் (Qatar) நாட்டின் தோஹா (Doha) நகரில் 15வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றதை அறிவீர்கள். ஆசியாக் கண்டத்திலுள்ள எல்லா நாடுகளையும் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் பங்கேற்கின்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 1951ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட்டு வருகின்றன.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (IOC) மேற்பார்வையின் கீழ் இடம் பெறும் இப்போட்டிகளை ஆசிய ஒலிம்பிக் கவுன்ஸில் (OCA) நெறிப் படுத்துகின்றது. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் போட்டியாளர்களைத் தெரிவு செய்து போட்டிக்கு அனுப்பும் வேலையை அந்தந்த நாட்டின் தேசிய ஒலிம்பிக் கமிட்டி (NOC) செய்கின்றது. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நாடுகள் மாத்திரமே ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும். எனினும் தாய்வான் நாட்டின் அந்தஸ்து தொடர்பாக இருந்துவரும் சர்ச்சைகள் காரணமாக அது Chinese Taipei என்ற பெயரில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் பெரும்பாலான ஆசிய நாடுகள் அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறலாயின. இதனைத் தொடர்ந்து ஆசிய நாடுகளின் திறமைகளை வெளிக்காட்டக் கூடிய வகையில் தனியான விளையாட்டுப் போட்டியொன்றின் தேவையைப் பல ஆசிய நாடுகள் உணரத் தொடங்கின. 14வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 1948இல் லண்டன் மாநகரிலே இடம்பெற்றன. அப்போது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிலிருந்த இந்தியப் பிரதிநிதியான குரு தத் ஸோந்தி என்பவர் ஆசிய விளையாட்டுப் போட்டிகளைத் தோற்றுவிப்பது பற்றிக் கலந்துரையாடல் ஒன்றினை நடத்துமாறு ஆசிய நாடுகளின் விளையாட்டுத் துறைப் பிரமுகர்களுக்கு ஆலோசனை கூறினார்.

இக்கலந்துரையாடலின் போது ஆசிய மெய்வல்லுனர் கூட்டமைப் பொன்றினை (Asian Athletic Federation) அமைப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டது. 1949இல் இவ்வமைப்பு உத்தியோகபூர்வமாகத் தோற்றுவிக்கப்பட்டதோடு அதன் பெயர் Asian Games Federation என மாற்றியமைக்கப்பட்டது. அதனையடுத்து முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை 1951இல் இந்தியாவின் தலைநகரான புது டில்லியில் நடத்துவது எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

1962இல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்வது தொடர்பாகச் சில தகராறுகள் ஏற்

பட்டன. அவ்வாண்டில் போட்டிகளை நடாத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த இந்தோனேசியா, ஆசிய நாடுகளான சீனக்குடியரசு (தாய்வான்), இஸ்ரவேல் என்பவற்றைப் போட்டிகளுக்கு அனுமதிக்க மறுத்துவிட்டது. மக்கள் சீனக் குடியரசே உண்மையான சீனா தேசம் என்பதனாலேயே சீனக் குடியரசு என்ற பெயரில் தன்னை அழைத்துக் கொண்ட தாய்வான் தீவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பலஸ்தீன மக்களின் நிலத்தையும் உரிமைகளையும் பறித்துக்கொண்ட ஒரு நாடு என்ற வகையில் இஸ்ரவேலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. 1966இல் தாய்லாந்தில் நடந்த போட்டிகளில் இஸ்ரவேல் பங்கு பற்றியதால் அரபு நாடுகள் ஆசிய விளையாட்டுக் களைப் பகிஷ்கரித்தன.

1970இல் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் தென்கொரியாவிலேயே இடம் பெற ஏற்பாடாகி இருந்தது. எனினும் வட கொரியாவிலிருந்து வந்த பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாகத் தென் கொரியா தனது திட்டத்தைக் கைவிட்டது. எனவே அவ்வாண்டின் போட்டிகள் தென் கொரியாவின் செலவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலேயே நடாத்தப்பட்டன.

1977இல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவிருந்த பாகிஸ்தான், இந்தியாவுடனும் பங்காளதேஷுடனும் ஏற்பட்ட சச்சரவுகள் காரணமாகத் தன் முயற்சியைக் கைவிட்டது. எனவே அவ்வாண்டிலும் போட்டிகளை பாங்கொக்கிலேயே நடாத்த வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறான நிகழ்வுகள் காரணமாக ஆசிய நாடுகளின் தேசிய ஒலிம்பிக் கமிட்டிகள் ஆசிய விளையாட்டுக் கூட்டமைப்பின் யாப்பினை மாற்றியமைக்க முடிவுசெய்தன. இதன் விளைவாக ஆசிய ஒலிம்பிக் கவுன்ஸில் என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. 1986இல் தென் கொரியாவில் இடம் பெற்ற போட்டிகள் முதல் இக்கவுன்ஸிலே ஆசிய விளையாட்டுக்களை மேற்பார்வை செய்து வருகிறது.

அதன் பின்னர் இடம்பெற்ற போட்டிகளில் 'சீன தாய்ப்பே' (Chinese Taipei) என்ற பெயரில் பங்குபற்றத் தாய்வானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அத்தோடு இஸ்ரவேல் நாட்டை ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலிருந்து நிரந்தரமாக ஒதுக்கிவைப்பதற்கு ஆசிய ஒலிம்பிக் கவுன்ஸில் இணங்கியதோடு ஐரோப்பியப் போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு அந்நாட்டுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

1994 ஆசிய விளையாட்டுக் களின் போது முன்னைய சோவியத் குடியரசுகளாக விளங்கிய கஸாகிஸ்தான், கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மேனிஸ்தான், தாஜிகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பல அங்கத்துவ நாடுகளின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

ஒலிம்பிக் விளையாட்டுக்களில் இடம்பெறுவது போன்ற விளையாட்டு மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளோடு 'கபடி' போன்ற பிராந்திய விளையாட்டுக்களும் ஆசிய விளையாட்டுக்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இது வரை இடம்பெற்றுள்ள ஆசிய விளையாட்டுக்களின் விபரம் அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது:

I. *1951 புதுடில்லி, இந்தியா*

II.*1954 மணிலா, பிலிப்பைன்ஸ்*

III.*1958 தோக்கியோ, ஜப்பான்*

IV.*1962 ஜகார்த்த, இந்தோனீஷியா*

V.*1966 பாங்கொக், தாய்லாந்து*

VI.*1970 பாங்கொக், தாய்லாந்து (தென் கொரியாவில் நடக்க இருந்தது)*

VII. *1974 தெஹ்ரான், ஈரான்*

VIII. *1978 பாங்கொக், தாய்லாந்து (பாகிஸ்தானில் நடக்க இருந்தது)*

IX. *1982 புது டில்லி, இந்தியா*

X. *1986 ஸியோல், தென்னகொரியா*

XI. *1990 பீஜிங், சீனா*

XII. *1994 ஹிரோசிமா, ஜப்பான்*

XIII. *1998 பாங்கொக், தாய்லாந்து*

XIV. *2002 பூஸான், தென்கொரியா*

XV. *2006 தோஹா, கத்தர்*

XVIவது போட்டிகள் 2010இல் சீனாவின் குவாங்ஸு நகரில் இடம் பெறும்.

*2014இல் நடைபெறவுள்ள XVIIவது விளையாட்டுப் போட்டிகள் எங்கே நடக்கும் என்பது 2007இல் அறிவிக்கப்படும்.*

---

## என்ன நடந்தது?

*அந்த வீட்டின் முன்னால் ஒரு பொலிஸ் கார் வந்து நின்றது. அதிலிருந்து அந்த வீட்டு முதியவரும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் இறங்கி வந்தனர். இந்தக் காட்சியைக் கண்டதும் வீட்டிலிருந்தோருக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது.*

*"என்ன நடந்தது?" என்று பதறியவாறு பொலிஸாரிடம் கேட்டாள் முதியவரின் மனைவி.*

*"சீரியஸாக ஒன்றுமில்லை. நகரத்துப் பூங்காவிலே இவர் தடுமாறிக் கொண்டிருந்தார். வழமையாக வீட்டுக்கு வரும் பாதையைத் தாம் மறந்துவிட்டதாகச் சொன்னார். எனவேதான் நாம் அழைத்து வந்தோம். இவர் விடயத்தில் இனிமேல் கொஞ்சம் கவனமாக இருந்தால் நல்லது" என்று கூறிவிட்டுப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விடைபெற்றனர்.*

*"இதென்ன கூத்து? ஒரு நாளும் இல்லாத மாதிரி இன்று உங்களுக்கு என்ன நடந்தது?" என்று விசனத்தோடு கேட்டாள் முதியவரின் மனைவி.*

*"ஒன்றுமில்லை. வீட்டுக்கு நடந்து வருவதை நினைக்க அலுப்பாக இருந்தது. எனவே சும்மா ஒரு நடிப்புப் போட்டேன்" என்றார் முதியவர்.*

---

## அரும்பு இதழ்களைத் தபால் மூலம் பெற்றுக்கொள்ளல்

அரும்பு இதழைத் தபால் மூலம் பெற விரும்புவோர் ஓர் இதழ் வெளிவந்த பின்னர் அதன் விலையையும் தபாற் கட்டணத்தையும் சேர்த்து ரூபா 40.00 அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். **மறு அறிவித்தல் வரை நீண்ட கால சந்தா முறை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.**

மணியோடர் அனுப்பும் போது பணம் பெறுபவர் பெயர் M. Hafiz Issadeen எனவும் தபாற் கந்தோர் Dharga Town எனவும் குறிப்பிடத் தவறாதீர்கள்.



# பேரீச்சை (Dates)

**ப**ண்டைக் காலம் தொட்டே மனிதர்களால் போற்றிப் பேணப் பட்ட தாவரங்களுள் பேரீச்சை முதல் இடத்தைப் பெறுகின்றது. கி.மு. 500வது ஆண்டளவில் உலகின் முதலாவது நாகரிகத்தைத் தோற்று வித்த ஸுமேரியர்கள் பேரீச்சையைப் பயிர்செய்திருக்கிறார்கள். இந்த வகையில் மனிதனால் திட்டமிட்டுப் பயிரிடப்பட்ட முதலாவது தாவர வகையாகவும் இது திகழ்கிறது.

பேரீச்சையின் தாவரவியற் பெயர் *Phoenix dactylifera* என்பதாகும். அதன் சாதிப் பெயரான Phoenix என்பது இத்தாவர வகை பல பிரதேசங்களுக்கும் பரவக் காரணமாக இருந்த பீனீஷியர்களைக் குறிக்கிறது.

ஸுமேரியர்களும் அவர்களையடுத்து நாகரிகங்களைத் தோற்றுவித்த பாபிலோனியர்கள், அஸிரியர்கள், எகிப்தியர்கள் முதலியோரும் பேரீச்சை மரத்தை புனிதம் பொருந்தியதாகவே கருதினார்கள். பிற்காலத்தில் உலகில் தோன்றிய யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கும் பேரீச்சை அதிக முக்கியத்துவம் உடையதாகவே திகழ்கிறது. யூதர்கள் தமது அறுவடைத் திருவிழாவின் போது கொட்டில்களை அமைப்பதற்குப் பேரீச்சம் ஓலைகளையே உபயோகிப்பார்கள். கிறிஸ்தவர்கள் குருத்தோலை ஞாயிறு (Palm Sunday) தினத்தில் ஜெருஸலம் நகரினூடாக இயேசு நாதரின் பிரயாணத்தை நினைவு கூர்வதற்காக பேரீச்சம் ஓலைகளைக் காவிக் கொண்டு செல்வார்கள்.

வட ஆபிரிக்கப் பாலைவனச் சோலை நிலங்களிலேயே (Oasis) பேரீச்சந் தாவரம் முதலில் தோன்றியிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. ஒரு வேளை தென்மேற்கு ஆசியப் பகுதிகளிலும் அதே காலத்தில் இத்தாவரம் தோன்றியிருக்கலாம். பின்னர் அது மத்திய கிழக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியிருக்கலாம்.

வட ஆபிரிக்க முஸ்லிம்கள் பேரீச்சையை ஐரோப்பாவின் ஸ்பெயின் நாட்டுக்குக் கொண்டு சென்றனர். இன்றும் தென் ஸ்பெய்னிலுள்ள சில பகுதிகளில் பேரீச்சை செழித்து வளர்கின்றது. பிற்காலத்தில் ஸ்பானியர்கள் இத்தாவரத்தைத் தமது அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு எடுத்துச் சென்றனர். கியூபாவில் பேரீச்சந் தோட்டமொன்றை அமைக்கும் முயற்சி 1513இல் மேற்கொள்ளப்பட்டது. காலப்போக்கில் கலிபோர்னியா, அரிஸோனா, நெவாடா ஆகிய ஐக்கிய அமெரிக்க மாநிலங்களிலும் மெக்ஸிகோ, பேரு, சிலி போன்ற நாடுகளிலும் பேரீச்சை பயிரிடப்படலாயிற்று. இன்று அமெரிக்காவின் கலிபோர்னி

யா மாநிலம் பேரீச்சை உற்பத்திக்குப் பெயர்பெற்ற இடமாக மாறியுள்ளது.

தற்போது ஈரான், பாகிஸ்தானின் தென் பகுதிகள், இந்தியாவின் மேற்கு மாநிலங்கள், அவுஸ்திரேலியாவின் Alice springs என்ற பகுதி முதலியவற்றில் பேரீச்சைப் பயிர்ச் செய்கை இடம்பெறுகிறது.

மிக மெல்லிய குற்றியைக் கொண்ட பேரீச்சை மரமானது சுமார் 30 மீட்டர் உயரம் வரை நிலைக் குத்தாக நிமிர்ந்து வளரக்கூடியது. காய்ந்து விழுந்த ஓலைகளது அடிப்பாகத்தின் மீதிகள் குற்றியின் மீது ஒட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். மரத்தின் உச்சிப் பகுதியில் சுமார் 20-30 ஓலைகள் குடைபோன்று விரிந்து காணப்படுகின்றன. உச்சியிலுள்ள குருத்தோலைகள் நிமிர்ந்தும் கீழ்ப் பகுதியிலுள்ள முற்றிய ஓலைகள் கீழ் நோக்கிக் குவிந்தும் இருக்கின்றன. 6m வரை நீளமாக வளரக்கூடிய ஓலைகளின் கீற்றுக்கள் நீலப்பச்சை நிறமாக கூர் முனையுடன் நீண்டு காணப்படும்.

பொதுவாக, ஒரே வேர்த் தொகுதியிலிருந்து பல பேரீச்சை மரங்கள் முளைத்து வளர்ந்திருப்பதைக் காணமுடியும். அதேவேளை தனித்து வளர்ந்த மரங்களும் பெருமளவில் காணப்படும். பேரீச்சை மரங்கள் சராசரியாக வருடத்திற்கு 25-30cm என்ற வீதத்தில் வளர்ச்சியடைகின்றன.

பேரீச்சையின் பூக்கள் சிறிதாகவும் வெண்ணிறமும் மணமும் உடையனவாகவும் காணப்படும். இவை சுமார் 120cm நீளமுள்ள கொத்துக்களாகத் தோன்றும். பேரீச்சை ஈரில்லத் தாவரமாகும். அதாவது ஆண்பூக்களை மாத்திரம் கொண்ட ஆண் தாவரம், பெண் பூக்களை



மாத்திரம் கொண்ட பெண் தாவரம் என இரு வேறு வகைகள் உண்டு.

பொதுவாகக் காற்றின் மூலமே மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. எனினும் மகரந்தச் சேர்க்கைக்குக் காற்றை நம்பியிருந்தால் பழ உற்பத்தி மிகக் குறைவாகவே இருக்கும். எனவே செயற்கையான மகரந்தச் சேர்க்கை முறைகள் ஆதிகாலம் தொட்டே பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

ஓர் ஆண் தாவரத்தைக் கொண்டு ஏறக்குறைய 50 பெண் தாவரங்களில் மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்தலாம். ஆதிகாலத்தில் ஆண் பூவை வெட்டியெடுத்து பெண் தாவரத்தில் பெண் பூக்களோடு இணைத்துக் கட்டி வைப்பார்கள். இப்போது பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் மரத்தில் ஏறி மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்துகின்றனர். சில தோட்டக்காரர்கள் ஆண் தாவரங்கள் எதையும் வைத்திருக்க மாட்டார்கள். பேரீச்சை பூக்கும் காலங்களில் சந்தையில் விற்பனைக்கு வரும் ஆண்பூக்களை வாங்கி மகரந்தச் சேர்க்கைக்காகப் பயன் படுத்திக் கொள்வார்கள்.

பேரீச்சையில் பல வகைகள் உண்டு. பொதுவாக இத்தாவரத்தின் கனி 3-7 cm நீளமும் 2-3 cm விட்டமும் கொண்டதாக நீள் வட்ட உருளை வடிவத்தில் இருக்கும். முற்றிப் பழுக்க முன்னர் கனியின் நிறம் தாவர வகைக்கு ஏற்ப பிரகாசமான சிவப்பு முதல் மஞ்சல் வரை வேறுபடலாம். பேரீச்சம் கனியில் 2-2.5 cm நீளமும் 6-8 mm தடிப்பும் கொண்ட கடினமான தனி வித்துக் காணப்படும். கனியின் வகை அதில் அடங்கியுள்ள வெல்லங்களின் அளவுகளுக்கு ஏற்ப வேறுபடும். 100g பேரீச்சம் பழம் 960KJ (230 கிலோ கலோரி) சக்தியைத் தரக்கூடியது. உலர்த்தப்படாத நிலையில் அது பெருமளவு விட்டமின்-Cஐக் கொண்டிருக்கும்.

வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பல்வேறு உணவுப் பண்டங்களினதும் தயாரிப்பில் பேரீச்சங்கனி பயன்படுத்தப் படுகின்றது. கனக்குற்றிகளாகவும், பசையாகவும், பாணியாகவும், பழச்சாறாகவும் பதப்படுத்தப்பட்டு அது விற்பனைசெய்யப்படுகிறது. இந்தியா, கானா, ஐவரி கோஸ்ட் போன்ற நாடுகளில் பேரீச்சம் பூந்துணரில் இருந்து பெறப்படும் சாறிலிருந்து கள்ளு, கருப்பட்டி போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

பேரீச்ச மரக்குற்றி தென்னங் குற்றி அளவுக்கு வலிமையுடையதாக இல்லாத போதிலும் குடிசைகளில் தூண்களாகவும், வளைகளாகவும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு பயன்படாமல் மீதியாகும் பகுதிகள் விறகாக உபயோகிக்கப்படுகின்றன. பேரீச்சம் ஓலைகள் கூரை வேயவும், பாய்கள், கூடைகள், விசிறிகள் முதலியவற்றைப் பின்னவும் உபயோகிக்கப்படுகின்றது.

பேரீச்ச வித்துக்கள் நீரில் ஊற வைத்து அரைக்கப்பட்டு விலங்கு உணவாக உபயோகிக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து பெறப்படும் எண்ணெய் சவர்க்காரத் தயாரிப்புக்கு உகந்தது. அவற்றிலிருந்து இரசாயன முறையில் ஒட்சாலிக் அமிலத்தைப் பெறலாம். அவற்றை எரித்துப் பெறப்படும் கரி பொற்கொல்லர்களால் பயன்படுத்தப்படுகிறது. இவ்வித்துக்களை வறுத்து அரைத்துக் கோப்பித் தூள் போல் பயன்படுத்தவும் முடியும்.

பேரீச்சையின் குருத்தோலைகள் கறி சமைப்பதற்கு உபயோகிக்கப்படுகின்றன. பூக்களும் இவ்வாறு உபயோகிக்கப்படலாம். பழங்கள் பறிக்கப்பட்ட பின் எஞ்சும் பூந்துணரின் பகுதி துடைப்பமாகப் பயன்படுத்தப்படுகிறது. காயப்பட்ட பேரீச்சங் குற்றியிலிருந்து வெளிவரும் ஒருவகைப் பிசின் இந்தியாவில் வயிற்றோட்டம், சிறுநீர்த் தொகுதி நோய்கள் முதலியவற்றைக் குணமாக்கப் பயன்படுத்தப் படுகின்றது.

பொதுவாக தென்னை, பனை போன்று பேரீச்ச மரத்தின் எல்லாப் பகுதிகளும் ஏதேனுமொருவகையில் பயனுடையனவாக இருக்கின் றன.

## கேள்வி – பதில் பகுதி

அறிவு சார்ந்த விடயங்கள் பற்றித் தெளிவு பெறுவதற்காகக் கேள்விகளை வாசகர்கள் இப்பகுதிக்கு அனுப்பி வைக்கலாம். அவற்றுள் பயனுள்ளவை என நாம் கருதுபவற்றுக்கு மாத்திரம் பதில் அளிக்கப்படும். கேள்விகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதித் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்



## நோபெல் பரிசு பெற்ற மனித நேயர்

# அல்பேர்ட் ஷ்வைட்ஸர்

**(Dr. Albert Schweitzer)**

**த**னது வாழ்க்கையில் பாதிக் காலத்தை ஒடுக்கப்பட்ட ஆபிரிக்க மக்களுக்காக வைத்தியச் சேவை புரிவதில் செலவு செய்து உலகின் மிக உன்னதமான மனிதர்களுள் ஒருவராகப் போற்றப்பட்டவர் Dr. அல்பேர்ட் ஷ்வைட்ஸர்.

ஷ்வைட்ஸர் என்றால் சுவிஸ் தேசத்தவர் என்று பொருள். ஆனால் அவர் சுவிஸ் நாட்டவரல்ல. ஜேர்மனிக்குச் சொந்தமாக இருந்த அல்ஸேஸ் என்ற பிரதேசத்தில் 1875 ஜனவரி 14ம் திகதி பிறந்த ஷ்வைட்ஸர் அப்பிரதேசம் பிரான்ஸுக்குச் சொந்தமானதாக மாறியதனால் பிரெஞ்சுப் பிரஜையானார்.

அவர் பிறந்த குடும்பம் பல பரம்பரைகளாகச் சமயம், இசை, கல்வி ஆகிய துறைகளில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தது. அவரது தந்தையும் தாய் வழிப் பாட்டனும் புரட்டஸ்தாந்து மத குருக்களாக இருந்தவர்கள்.

தனது தந்தையார் மத குருவாகக் கடமை புரிந்த Günsbach என்ற ஊரிலேயே ஷ்வைட்ஸர் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். எனினும் அவர் கல்வியில் ஆர்வம் காட்டவில்லை. பதிலாக பண்ணைகளில் வேலை செய்யும் ஏழைச் சிறுவர்களைப் போல் அவரும் மிருகங்களை வளர்ப்பதிலும் மலைப் பிரதேசங்களில் சுற்றித் திரிவதிலுமே விருப்பம் காட்டினார்.

ஒன்பதாவது வயதில் அவர் Mulhouse என்ற இடத்திலுள்ள பாடசாலையில் சேர்ந்தார். அங்கு அவரது போக்கில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. விஞ்ஞானம், இலக்கியம், இசை ஆகிய பாடங்களில் அவர் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கினார். 1893இல் ஸ்ட்ரஸ்பேர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து இறையியல் துறையில் (Theology) பட்டம் பெற்றார்.

தனது 23வது வயதில் பரிஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த அவர் அதே துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். முப்பது வயது வரை கற்றுக் கொண்டு அதன் பின்னர் ஆபிரிக்காவுக்குச் சென்று அங்கு சமயப் பிரசாரப் பணியில் ஈடுபடுவதே அவரது இலட்சியக் கனவாக இருந்தது. அதுவரை அவர் தனது தந்தையைப் போன்று மத குருவாகப் பணி புரிந்தார். அத்தோடு இசை, இறையியல் ஆகிய துறைகளில் நூல்களையும் எழுதினார்.

முப்பது வயதை அடைந்ததும் அவர் தனது இலட்சியத்தை மற்றவர்களிடம் கூறினார். ஷ்வைட்ஸர் தனது வாழ்க்கையை வீணாக்கப் போவதாகவே அனைவரும் கருத்துத் தெரிவித்தனர். இந்நிலையில், மதப் பிரசாரகராகச் செல்வதை விட ஒரு வைத்தியராகப் பட்டம் பெற்றுச் சென்றால் ஆபிரிக்க மக்களுக்கு அதிக நன்மை

புரியலாம் என ஷ்வைட்ஸர் சிந்திக்கத் தொடங்கினார். எனவே ஸ்ட்ரஸ் பேர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அவர் மருத்துவம் படிக்க ஆரம்பித்தார். அதே வேளையில் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அப்பல்கலைக் கழகத்தில் இறையியல் துறைப் பேராசிரியராகவும் பணி புரிந்தார். அத்தோடு இசை நிகழ்ச்சிகளை நடத்தியும் நிதி திரட்டிக் கொண்டார்.

ஷ்வைட்ஸர் ஓர்கன் வாசிப்பதில் அதீத வல்லமை காட்டினார். அவரது இசை நிகழ்ச்சிகளை மக்கள் விரும்பி ரசித்தனர். ஒரு தடவை தனது அரசவையில் வந்து இசை நிகழ்ச்சியொன்றை நடத்துமாறு ஸ்பெய்ன் நாட்டு மன்னர் ஷ்வைட்ஸருக்கு அழைப்பு விடுத்திருந்தார். அங்கு அவர் ஓர்கன் கருவியொன்றை வாசித்துக் காட்டியபோது "ஓர்கன் வாசிப்பது சிரமமான காரியமா?" என மன்னர் ஷ்வைட்ஸரிடம் கேட்டாராம். "ஆம்! ஸ்பெய்னை ஆள்வது போன்றே கஷ்டமான செயல்தான்" என்றாராம் ஷ்வைட்ஸர்.

1911இல் தனது மருத்துவக் கல்வியைப் பூர்த்தி செய்த ஷ்வைட்ஸர் வைத்தியக் கலாநிதி (M.D) பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1912இல் அவர் ஹெலேன் என்றி பெண்ணை மணந்து கொண்டார். மருத்துவத் தாதியாக வேலை பார்த்த அவரது மனைவி அவரோடு ஆபிரிக்கா செல்லத் தயாரானார்.

1913இல் இருவரும் பிரான்ஸில் இருந்து கப்பல் மூலம் மேற்கு ஆபிரிக்காவிலுள்ள கேபொன் (Gabon) நாட்டுக்குச் சென்றனர். தமது அன்றாடத் தேவைகளுக்குரிய பொருட்களோடு மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் என்பன அடங்கிய எழுபது பொதிகளை அவர்கள் தம்மோடு எடுத்துச் சென்றனர்.

கப்பலில் மேற்கு ஆபிரிக்கக் கரையினை அடைந்த அவர்கள் ஒகோவே என்ற நதியினூடாகப் படகுகளிலும் தோணிகளிலும் செல்ல வேண்டியதாயிற்று. இறுதியில் லம்பரேனே (Lambaréné) என்ற இடத்தில் அமைந்திருந்த கிறிஸ்தவ மடத்தை அவர்கள் அடைந்தனர். அப்பகுதியில் வைத்தியசாலைகள் எதுவும் இருக்கவில்லை. எனவே ஷ்வைட்ஸர் தானே தனது மருத்துவ மனையை நிர்மாணித்துக்கொண்டார். முதலாம் வருடத்தில் அவரும் அவரது மனைவியும் சேர்ந்து சுமார் 2000 நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கினர்.

1914இல் உலகப் போர் ஆரம்பமாகியது. போரின் போது (1917இல்) ஜெர்மன் நாட்டவர் என்ற காரணத்தால் ஷ்வைட்ஸரைப் பிரெஞ்சுப் படையினர் கைது செய்தனர். அவரும் மனைவியும் பிரான்ஸிலுள்ள தடுப்பு முகாம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனால் அவரது மருத்துவப் பணி தடைப்பட்டது.

1918இல் விடுதலை செய்யப்பட்ட பின்னர் தொடர்ந்து ஆறு வருடங்களை அவர் ஐரோப்பாவிலேயே கழித்தார். அக்காலப் பகுதியில் அவர் மதகுருவாகப் பணியாற்றியதோடு மருத்துவப் பாட நெறிகள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்தார். அத்தோடு தனது ஆபிரிக்கப் பணியைத் தொடர்வதற்காக நிதி திரட்டுவதிலும் ஈடுபட்டார்.

1924இல் அவர் மீண்டும் ஆபிரிக்காவுக்குச் சென்றார். சிறு குழந்தையொன்று இருந்ததால் மனைவி அவரோடு செல்ல முடியவில்லை. லம்பரேனேக்கு அவர் திரும்பி வந்த

போது அவரது மருத்துவ மனைக்குக் கூரைகூட இருக்கவில்லை. எங்கும் காடு வளர்ந்திருந்தது. எனினும் உடனடியாக அவ்விடத்தைத் திருத்தியமைத்த ஷ்வைட்ஸர் விரைவில் தமது மருத்துவப் பணியைத் தொடங்கினார்.

காலப்போக்கில் அவருக்கு அதிகளவு உதவிகள் கிடைக்கத் தொடங்கின. எனவே 3 kmக்கு அப்பால் புதிய இடமொன்றைத் தெரிவு செய்து தமது மருத்துவ மனையை அங்கு நிர்மாணித்தார். நோயாளிகளும் இப்பணியில் அவருக்கு உதவி செய்தனர். அனைவருக்கும் தேவைப்படும் உணவைப் பயிர் செய்து கொள்ளவும் புதிய இடத்தில் வசதிகள் இருந்தன.

இடையிடையே ஐரோப்பாவுக்குச் சென்ற ஷ்வைட்ஸர் தமது பணிக்காக நிதி திரட்டும் நிகழ்ச்சிகளை அங்கு நடத்தினார். நாளடைவில் அவரது பெயரும் புகழும் உலகெங்கும் பரவத் தொடங்கியது. உலக நாடுகள் பலவற்றிலிருந்து அவருக்கு உதவிகள் வந்து குவியத் தொடங்கின. அவரது மருத்துவ மனை 70 கட்டடங்களைக் கொண்டதாக விரிவடைந்தது. சுமார் 500 நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற அங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

லம்பரேனே பகுதியில் மருத்துவராகவும் சத்திர சிகிச்சை நிபுணராகவும் ஆலயத்தின் போதகராகவும் கிராமத்தின் நிர்வாகியாகவும் கட்டட நிர்மாண மேற்பார்வையாளராகவும் ஷ்வைட்ஸர் பணியாற்றினார்.

அவரது சேவைகளைப் பாராட்டி ஜெர்மன் நாட்டின் புகழ் மிக்க கதே பரிசு (Goethe Prize) அவருக்கு வழங்கப்பட்டது. அத்தோடு பல பல்கலைக் கழகங்கள் அவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்களை வழங்கின. அமெரிக்காவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த *Life* சஞ்சிகை ஷ்வைட்ஸரை "உலகிலுள்ள மிக உன்னதமான மனிதர்" (the greatest man in the world) எனப் பெயரிட்டு அழைத்தது.

எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போல் 1952ம் ஆண்டின் நோபெல் சமாதானப் பரிசு அல்பேர்ட் ஷ்வைட்ஸருக்கு வழங்கப்பட்டது. எனினும் தனது மருத்துவப் பணிகள் காரணமாக அவருக்கு நோர்வே சென்று அப்பரிசைப் பெற்றுக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. இறுதியில் 1954ம் ஆண்டில் தான் அவர் அப்பரிசைப் பெற்றுக் கொண்டார். அதன் மூலம் கிடைத்த 33,000 டொலர்களையும் லம்பரேனேயில் தொழு நோயாளர்களுக்கான மருத்துவ மனையொன்றை அமைப்பதற்குப் பயன் படுத்திக் கொண்டார்.

ஷ்வைட்ஸர் மிக எளிமையான முறையிலேயே வாழ்ந்தார். எப்போதும் பழைய ட்ரவுஸர் ஒன்றையும் வெள்ளை சேர்ட் ஒன்றையுமே அணிவார். அவரிடம் ஒரேயொரு கழுத்துப் பட்டி(tie)தான் இருந்தது. அதனைக் கால்சட்டைப் பையில் வைத்திருப்பார். யாராவது முக்கியஸ்தர்களைச் சந்திக்கும் போது மாத்திரம் அதனைக் கழுத்தில் மாட்டிக் கொள்வார். அவருடைய இந்தப் போக்கைக் கேலி செய்ய நினைத்த ஒரு பெண் "எனக்குத் தெரிந்த சில ஆண்கள் நூற்றுக்கு மேல் tieகளை வைத்திருக்கின்றனர்" என்றாராம். அதற்கு ஷ்வைட்ஸர் "ஆனால், அவர்களுக்கும் ஒரு கழுத்துத்தானே இருக்கும்" என்று பதில் கொடுத்தாராம்.

ஷ்வைட்ஸரின் மனைவி இருபது வருட இடைவெளிக்குப் பின்

மீண்டும் ஆபிரிக்காவுக்குச் சென்று தனது கணவருடன் சேர்ந்து பணி யாற்றினார். 1957இல் ஐரோப்பாவுக் குத் திரும்பிய அவர் சில நாட்களின் பின் இறந்து போனார். மனைவியின் ஈமச் சடங்குகளில் கலந்துகொள்ள பிரான்ஸுக் குச் சென்ற ஷ்வைட்ஸர் சில நாட்களின் பின்னர் லம்பரே னேக்குத் திரும்பிவிட்டார்.

தனது 90வது வயது வரையிலும் அவர் அங்கேயே பணியாற்றினார். அதுவரை அவர் பல நூல்களை எழுதி வெளியிட்டிருந்தார். இவற்றுள் *"The Quest of the Historical Jesus"*, *"On the Edge of the Primeval Forest"*, *"The Decay and Restoration of Civilization"*, *"Civilization and Ethics"*, *"Christianity and the Religions of the World"* என்பன குறிப்பிடத் தக்கவை.

அல்பேர்ட் ஷ்வைட்ஸர் 1965 செப்டம்பர் 4ம் திகதி காலமானார். அவர் லம்பரேனே கிராமத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார். ■

## ஏன் அப்படி நினைக்கிறீர்?

தனது பண்ணைக்குள் தவறுதலாக நுழைந்த பெரிய ட்ரக் ஒன்றின் காரணமாகத் தனது பெறுமதிமிக்க காளை மாடொன்று காணாமல் போய் விட்டதாக விவசாயி ஒருவன் அந்த ட்ரக் உரிமையாளர்களுக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸ் விசாரணையின் போது, காணாமற்போன காளைக்கு நஷ்ட ஈடாக 40,000 ரூபா தர வேண்டும் எனப் பிடிவாதமாக நின்றான் அந்த விவசாயி. இப்பிரச்சினை தொடர்பாக ட்ரக் உரிமையாளர்கள் ஒரு பிரபல வழக்கறிஞரின் உதவியை நாடினர்.

"நீதி மன்றத்திற்குப் போய் வழக்காடினால் உனக்கு ஒரு சதமும் கிடைக்காமற் செய்ய என்னால் முடியும். அதிகம் பேசாமல் 10,000 ரூபாவைப் பெற்றுக்கொண்டு முறைப்பாட்டை வாபஸ் பெற்றுக்கொள். இல்லாவிட்டால் நீ தான் தோற்றுப் போவாய்" என்று விவசாயியை எச்சரித்தார் அந்த வழக்கறிஞர். சிறிது யோசித்த பின் 10,000 ரூபாவைப் பெற்றுக்கொள்ள விவசாயி ஒப்புக்கொண்டான்.

சில நாட்களின் பின்னர் அந்த விவசாயியை வழியில் சந்தித்த வழக்கறிஞர் "அன்று நீர் என்னிடம் ஏமாந்து விட்டீர். நீர் வழக்குத் தொடுத்திருந்தால் நாம் தான் தோற்றுப் போயிருப்போம். ஏனெனில் சம்பவம் நடந்தபோது அந்த ட்ரக்கின் சாரதியும் உதவியாளனும் குடிபோதையில் இருந்திருக்கிறார்கள். எமக்கு ஆதரவாக எந்தச் சான்றும் இருக்கவில்லை. எளிதாக நீர் கேட்ட 40,000 ரூபாவையும் பெற்றுக்கொண்டிருக்கலாம். பாவம்! எனது பேச்சில் நீர் ஏமாந்துவிட்டீர்" என்றார் ஏளனமாக.

"இல்லை. நான் வழக்கில் வெற்றிபெற்றிருக்க முடியாது" என்றான் விவசாயி.

"ஏன் அப்படி நினைக்கிறீர்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் வழக்கறிஞர்.

"காணாமற்போன எனது காளைமாடு நேற்றுக் காலையில் வந்து சேர்ந்துவிட்டது" என்றான் விவசாயி அமைதியாக.

# பஜாஜ் வாகன உற்பத்தியாளர்கள்

(BAJAJ Auto Limited)




இன்று இலங்கையின் எல்லா நகர்களிலும் கிராமங்களிலும் பஜாஜ் மூன்று சக்கர வாகனங்கள் சுற்றித் திரிவதைக் காண்கிறோம். இவை இந்தியாவிலுள்ள பஜாஜ் ஒட்டோ லிமிற்றட் என்ற கம்பனியினால் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கம்பனிதான் பஜாஜ் ஸ்கூட்டர்கள், மோட்டர்சைக்கிள்கள் என்பவற்றையும் உற்பத்தி செய்கின்றது. இந்தியாவின் முன்னணி வர்த்தக நிறுவனங்களுள் ஒன்றான பஜாஜ் குரூப் ஒப் கம்பனீஸ் என்ற கூட்டமைப்பின் பிரதான அங்கமாக பஜாஜ் ஒட்டோ லிமிற்றட் விளங்குகிறது.

பஜாஜ் குரூப்பின் இன்னோர் அங்கமான பஜாஜ் இலக்ட்ரிகல்ஸ் லிமிற்றட் என்ற நிறுவனம் மின் விசிறிகள், மின்னழுத்திகள், மின் விளக்குகள் போன்ற வீட்டுப் பாவனைக்குரிய மின் சாதனங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. இதே போன்று இரும்பு மற்றும் உருக்கு உற்பத்தி, காப்புறுதிச் சேவை பிரயாண முகவர் சேவை, நிதி வழங்கற் சேவை போன்ற துறைகளிலும் பஜாஜ் கூட்டமைப்பைச் சேர்ந்த சில நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

பஜாஜ் வர்த்தக முயற்சிகள் ஜமன்லால் பஜாஜ் என்பவரால் 1926ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இவர் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்த ஒருவர். மகாத்மா காந்தியின் சீடராகவும் விசுவாசத்திற்கு உரியவராகவும் திகழ்ந்தவர். காந்திஜி இவரைத் தமது வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொண்டிருந்தார். இந்திய விடுதலை இயக்கத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்த காரணத்தால் ஜமன்லால் பஜாஜினால் தனது வியாபார முயற்சிகளில் அதிக அக்கறை காட்ட முடியாமற் போய்விட்டது.

அவரது மூத்த மகனான கமல்நாயன் பஜாஜ் என்பவர் 1942இல் வியாபாரத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது நிர்வாகக் காலத்தில்தான் பல உற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1945 இல் அவர் ஆரம்பித்த Bachraj Trading Corporation Ltd என்ற கம்பனி தான் 1960இல் Bajaj Auto Ltd எனப் பெயர் மாற்றம் பெற்றது.

இந்தக் கம்பனி ஆரம்பத்தில் ஸ்கூட்டர்கள், மோட்டர் சைக்கிள்கள், மூன்று சக்கர வாகனங்கள் முதலியவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்வதிலேயே ஈடுபட்டு வந்தது. இவ்வகை வாகனங்களை இந்தியாவில் உற்பத்தி செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தை அது 1959இல் இந்திய அரசிடமிருந்து பெற்றுக்கொண்டது.

முதலில், இத்தாலியைச் சேர்ந்த Piaggio & Co என்ற நிறுவனம் உற்பத்தி செய்யும் Vespa என்ற பெயருடைய ஸ்கூட்டர்களை அந்நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இந்


ஜமன்லால் பஜாஜ்


கமல்நாயன் பஜாஜ்


ராமகிருஷ்ண பஜாஜ்


ராஹுல் பஜாஜ்

தியாவில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதில் பஜாஜ் கம்பனி ஈடுபட்டது. இம்முயற்சி பெருமளவு வெற்றியளித்ததோடு நல்ல வருவாயையும் தொழில்நுட்ப அனுபவத்தையும் பெற்றுக் கொடுத்தது.

Piaggio கம்பனியுடன் செய்த தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் 1971 மார்ச் 31ம் திகதி காலாவதியாகியது. எனவே அந்த ஆண்டு ஏப்ரில் முதல் பஜாஜ் கம்பனி Bajaj என்ற பெயரில் ஸ்கூட்டர்களையும் மூன்று சக்கர வாகனங்களையும் உற்பத்தி செய்து சந்தைப்படுத்த ஆரம்பித்தது. அது வரை Vespa என்ற பெயரில் சுமார் ஒரு இலட்சம் வாகனங்களை உற்பத்தி செய்து தேவையான தொழில்நுட்ப அறிவையும் அனுபவத்தையும் பஜாஜ் நிறுவனம் பெற்றுக்கொண்டிருந்தது.

பஜாஜ் ஒட்டோ லிமிற்றட் நிறுவனத்தின் தலைமையகம் மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பூனா (Pune) நகரில் அமைந்திருக்கிறது. அதன் தொழிற்சாலைகள் அவுரங்கபாத் நகருக்கு அண்மையிலுள்ள வலூஜ் என்ற இடத்திலும் பூனாவுக்கு அருகிலுள்ள அகுர்தி, சகான் ஆகிய இடங்களிலும் இயங்கிவருகின்றன.

கமல்நாயன் பஜாஜின் இளைய சகோதரரான ராமகிருஷ்ண பஜாஜ் 1972 முதல் பஜாஜ் கம்பனிகளின் தலைமையைப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பஜாஜ் நிறுவனம் துரித வளர்ச்சி கண்டது. 1977இல் வருடத்திற்கு 100,000 வாகனங்கள் என்ற வீதத்தில் உற்பத்தி அதிகரித்தது. 1986 ஆகும் போது உற்பத்தி வீதம் வருடத்திற்கு 500,000 வாகனங்களாக அதிகரித்தது. 1995ம் ஆண்டில் பஜாஜ் நிறுவனம் 1 மில்லியன் வாகனங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தியது.

1995இல் ராமகிருஷ்ண பஜாஜின் மகனான ராஹுல் பஜாஜ் என்பவர் பஜாஜ் குரூப்பின் தலைவராகவும் முகாமைப் பணிப்பாளராகவும் பொறுப்பேற்று இன்றுவரை பணியாற்றி வருகிறார். இவரே பஜாஜ் ஒட்டோ லிமிற்றட்டின் தலைமை அதிகாரியாகவும் இருக்கின்றார். இவர் இந்தியாவின் வர்த்தகத் துறையில் மதிப்புக்குரிய தலைவர்களுள் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார். அவருடைய வியாபாரத் திறமையும் அயராத முயற்சியும் சர்வதேச ரீதியில்கூட அவருக்கு மதிப்பையும் மரியாதையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது. இன்று அவருடைய பெறுமதி 85 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவரது காலத்தில்தான் பஜாஜ் மோட்டர் சைக்கிள்களின் உற்பத்தியில் துரித விருத்தி ஏற்பட்டது. ஏற்கனவே ஜப்பானின் கவஸாகி கம்ப

னியுடன் இணைந்து பல்வேறு தரங்களைக் கொண்ட மோட்டர் சைக்கிள்களை பஜாஜ் கம்பனி உற்பத்தி செய்து வந்தது. அத்தோடு தம் சொந்தத் தயாரிப்புக்களான பஜாஜ் மோட்டர் சைக்கிள்களையும் அது உற்பத்தி செய்தது.

1996இல் பஜாஜ் நிறுவனம் தனது 150cc 3 port 2-stroke என்ஜினை விருத்தி செய்து தனது ஸ்கூட்டர்களிலும் முச்சக்கர வாகனங்களிலும் பயன்படுத்தத் தொடங்கியது. 1997 இல் Boxer என்ற பெயரிலும் 1998 இல் Caliber என்ற பெயரிலும் சக்தி வாய்ந்த மோட்டர் சைக்கிள்களை அது அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் பல்வேறு மொடல்களில் ஸ்கூட்டர்களும் மோட்டர் சைக்கிள்களும் உற்பத்தி செய்யப்படலாயின. இவற்றுள் Kawasaki-Bajaj Eliminator, CT 100, Bajaj Pulsar, Platina என்பன குறிப்பிடத்தக்கவை.

பஜாஜ் ஸ்கூட்டர்களும் மோட்டர் சைக்கிள்களும் இன்று 50 நாடுகளில் விற்பனையாகின்றன. பங்களாதேஷ், இந்தோனேஷியா, இத்தாலி, பிரேஸில் ஆகிய நாடுகளில் அங்குள்ள கம்பனிகளுடன் கூட்டாகச் சேர்ந்து வாகனங்களைத் தயாரித் துச் சந்தைப்படுத்துவதிலும் பஜாஜ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

2006ம் ஆண்டில் இயற்கை வாயுவில் ஓடும் முச்சக்கர வாகனமொன்றை பஜாஜ் இந்தோனேஷியாவில் அறிமுகப்படுத்தியது. பஜாஜின் கிளைக் கம்பனியொன்று ஐக்கிய அமெரிக்காவிலும் இருக்கிறது. மத்திய கிழக்கிலும் ஆபிரிக்காவிலும் பஜாஜ் வாகனங்களைச் சந்தைப்படுத்துவதற்காக 2003 ஜனவரியில் டுபாயிலும் பஜாஜ் காரியாலயமொன்று ஆரம்பிக்கப்பட்டது. நைஜீரியாவில் தொழிற்சாலையொன்றை அமைக்கும் முயற்சியொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்போது பஜாஜ் கம்பனி மாதத்திற்கு 200,000 மோட்டர் சைக்கிள்களை உற்பத்தி செய்கிறது. 2007 முடிவதற்குள் இதனை மாதத்திற்கு 300,000 ஆக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இன்று உலகில் இரண்டு சக்கர வாகனங்களின் உற்பத்தியில் 3வது இடத்தை பஜாஜ் நிறுவனம் சுவீகரித்துக் கொண்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்குள் பஜாஜ் ஓட்டோ லிமிற்றட் அடைந்துள்ள முன்னேற்றம் உண்மையில் பிரமிக்கச் செய்வதாகவே இருக்கிறது. உற்பத்தித் துறையில் இந்தியா அடைந்துவரும் துரித முன்னேற்றத்தை இது கோடிட்டுக் காட்டுகிறது. ■

## ஏனிந்த ஆவல்?

முதல் நாளிரவு தனது வீட்டுக்குள் நுழைந்த திருடனைப் பொலிஸார் பிடித்து வைத்திருப்பதாகக் கேள்விப்பட்ட ஒருவன் அந்தத் திருடனைப் பார்த்துப்பேசும் ஆவலோடு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் "நான் அந்த ஆளைச் சந்தித்துப் பேச முடியுமா?" என அனுமதி கேட்டான்.

"நீர் ஏன் அவனோடு பேச வேண்டும்?" என்று கேட்டார் பொலிஸ்காரர்.

"எனது மனைவி நித்திரையிலிருந்து கண்விழிக்காத முறையில் எப்படி அவன் என் வீட்டுக்குள் நுழைந்தான் என்பதை அவனிடம் கேட்டறிய ஆவலாய் இருக்கிறது. பல வருடங்களாக நான் முயற்சித்தும் இரவில் என்னால் அப்படி நுழைய முடியாமல் இருக்கிறதே" என்றான் அந்த மனிதன்.

மருத்துவம்



# இரைப்பை அழற்சி

(Gastritis)

எமது இரைப்பை நாம் உண்ணும் உணவைச் சேகரிக்கும் அங்கமாகத் தொழிற்படுவதோடு உணவுப் பொருட்களின் சமிபாட்டிலும் பங்கெடுக்கிறது. இரைப்பையின் உட்புறம் மென்சவ்வுப் படையொன்றினால் மூடப்பட்டிருக்கிறது. பல்வேறு காரணங்களால் இம் மென்சவ்வுப் படையில் ஏற்படுகின்ற அழற்சி (inflammation) நிலையையே மருத்துவத்தில் இரைப்பை அழற்சி (gastritis) என்கின்றனர். சிலர் இதனைச் சுருக்கமாக gas problem என அழைப்பதும் உண்டு. (ஏதேனுமோர் உறுப்பு அல்லது அதன் ஒரு பகுதி வீங்கிச் சிவந்து வலி தரும் நிலையையே மருத்துவத்தில் அழற்சி (inflammation) என்கின்றோம்)

இரைப்பை அழற்சியில் இரு வகைகள் உண்டு. ஏதேனுமொரு காரணத்தால் திடீரென உருவாகிச் சில நாட்களுக்குள் தணிந்து குணமாகிப் போகும் வகையை Acute gastritis (குறுங்கால இரைப்பை அழற்சி) என்கிறோம். பல்வேறு காரணிகளால் மெதுவாக உருவாகி நெடுநாள் நீடிக்கும் வகை Chronic gastritis (நெடுங்கால இரைப்பை அழற்சி) எனப்படும்.

இரைப்பைப் பகுதியில் அசௌகரிய உணர்வு, வயிற்றில் ஊதல், தலைவலி, குமட்டல், நாக்கின் மீது படலம் உருவாதல், வாயில் கெட்டசுவை என்பன குறுங்கால இரைப்பை அழற்சியின் பிரதான அறிகுறிகளாகும். ஏற்பட்டுள்ள அழற்சி கடுமையானதாக இருப்பின் மேற் சொன்ன அறிகுறிகளும் கடுமையானவையாக இருக்கும். அத்தோடு வயிற்றின் மேற்புறப் பகுதியில் வலி மிருதுத்தன்மை என்பவற்றோடு வாந்தி, காய்ச்சல் என்பனவும் ஏற்படலாம். சில வேளைகளில் இரைப்பையிலிருந்து குருதிப் பெருக்கும் ஏற்படக்கூடும்.

தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு மருந்து வகைகளே குறுங்கால இரைப்பை அழற்சிக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளன. குறிப்பாக, வலி நிவாரணியாகவும் மூட்டு அழற்சி, வாதம் போன்றவற்றிலிருந்து நிவாரணம் பெறுவதற்காகவும் உபயோகிக்கப்படும் Aspirin, Ibuprofen (Brufen), Indomethacin (Indocid), Diclofenac sodium (Voltaren), Mefenamic acid (Ponstan) போன்ற மருந்துகள் இரைப்பை அழற்சியை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இரைப்பை வெறுமையாக இருக்கும் நிலையில் இவ்வகை மருந்துகளை உட்கொள்வது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

இரைப்பை அழற்சியை ஏற்படுத்தக் கூடிய வேறு காரணிகளும் உண்டு. அளவுக்கு அதிகமாக உண்ணுதல், சமிபாடு அடையக் கஷ்டமான உணவுகளை உட்கொள்ளல், கடுங்குளிரான அல்லது ஈரலிப்பான கால நிலை, நச்சுத்தன்மையான தொற்றுக்கள், உணவு நஞ்சடைதல், ஒவ்வாமைத் தாக்கங்கள் (allergies) போன்றனவும் இரைப்பை அழற்சியைத் தோற்றுவிக்கலாம்.

சில வேளைகளில் ஏற்கனவே பீடித்த ஏதேனும் தொற்று நோயின் விளைவாகவும் இரைப்பையில் அழற்சி ஏற்படலாம். அதிகமாக மதுபானம் அருந்துவோர், புகை பிடிப்போர் முதலியோரும் இரைப்பை அழற்சிக்கு எளிதில் ஆளாகின்றனர்.

தவறுதலாகவோ வேண்டுமென்றோ அரிப்புத் தன்மையுடைய அமிலங்

கள், காரங்கள், வேறு நச்சுப் பொருட்கள் முதலியவற்றை அருந்தியவர்களும் கடுமையான இரைப்பை அழற்சிக்கு ஆளாவர். இவ்வாறான நிலைமைகளில் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும். எனினும் ஏனைய சாதாரண குறுங்கால இரைப்பை அழற்சி நிலைகள் சில நாட்களுக்குள் குணமடைந்து விடுகின்றன.

குறுங்கால இரைப்பை அழற்சிக்கு ஆளானோர் அதிலிருந்து நிவாரணம் பெறப் பின்வரும் நடை முறையைப் பின்பற்றுவது உகந்தது.

1. ஆகக் குறைந்தது இரண்டு நாட்களுக்காவது எல்லா வகையான உணவுகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதனால் இரைப்பையின் மென்சவ்வு சாதாரண நிலைக்குத் திரும்ப அவகாசம் கிடைக்கிறது.

2. பாமஸிகளில் பெற்றுக் கொள்ளக் கூடிய Digeine, Gelusil, Gaviscon போன்ற திரவ அமில எதிரியொன்றை (Antacid) அதற்குரிய அறிவுறுத்தல்களுக்கு ஏற்பப் பல தடவைகள் உட்கொள்ள வேண்டும்.

3. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருதடவை இரைப்பையின் மீது சூடான ஒத்தடம் கொடுத்தல் வேண்டும். இதனை இரண்டு நாட்களுக்கு மேல் தொடரக் கூடாது.

4. பட்டினி கிடந்த பின் கஞ்சி போன்ற மென் உணவுகளையே முதலில் உட்கொள்ள வேண்டும். படிப்படியாகச் சாதாரண உணவுகளை உண்ணத் தொடங்கலாம்.

5. இரைப்பை அழற்சியைத் தோற்றுவித்த காரணிகளை இனங்கண்டு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த நடவடிக்கைகளின் பின் னரும் அறிகுறிகள் தொடருமாயின் வைத்திய உதவிளை நாடுவது அவசியம்.

நெடுங்கால இரைப்பை அழற்சிக்குரிய பிரதான அறிகுறிகள் பின்வருமாறு: வாயில் கெட்ட சுவை, நாக்கின் மீது படலம் தோன்றுதல், வாயிலிருந்து துர் நாற்றம் வீசுதல், உணவுட்கொண்ட பின்னர் ஏப்பம் மூலம் வாயு வெளி வருதல், இரைப்பையிலிருந்து புளிப்புச் சுவையற்ற உணவு அல்லது திரவம் வாய்க்கு வருதல், சாப்பிட்ட பின்னர் வயிற்றின் மேற்புறப் பகுதியில் அசௌகரிய உணர்வு, இரைப்பையின் மீது மிருதுத் தன்மை, குமட்டல், உடலிலும் மனதிலும் ஏதோ அரைகுறை நோய் போன்ற உணர்வு.

சிலவேளைகளில் இவ்வறிகுறிகள் கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவுக்கு முனைப்பாக இருக்கமாட்டா.

நெடுங்கால இரைப்பை அழற்சி ஏற்படுவதற்குப் பல காரணிகள் ஏதுக்களாக அமைகின்றன. அவையாவன:

- பொருத்தமற்ற உணவுகளை அடிக்கடி உட்கொள்ளல்
- பொறித்த அல்லது எண்ணெய்த் தன்மையான உணவுகளை அதிக அளவில் உண்ணுதல்
- அளவுக்கதிகமாக வயிறு நிறையச் சாப்பிடுதல்
- உணவை மெல்லாமல் அவசர அவசரமாகச் சாப்பிடுதல்
- உணவுட்கொள்ளும் போது நீரை அல்லது வேறு பானங்களை அதிக அளவில் அருந்துதல்
- நேர ஒழுங்கின்றிக் கண்டகண்ட நேரங்களில் சாப்பிடுதல்
- உணவில் வாசனைப் பொருட்களை (spices) அதிகளவில் சேர்த்துக்கொள்ளல்
- கடுங்குளிரான பானங்களை அருந்துதல்
- புகைத்தலும் மது அருந்துதலும்
- மனக் கவலையோடு இருக்கும் போது அல்லது உடல் மிகக் களைப்புற்றிருக்கும் போது சாப்பிடுதல்

அத்தோடு குறுங்கால இரைப்பை அழற்சியினால் அடிக்கடி பாதிக்கப்படு

வோரிலும் நெடுங்கால இரைப்பை அழற்சி உருவாகலாம். *Helicobacter pylori* என்ற வகை பற்றீரியாவின் தொற்றுக் காரணமாகவும் நீண்ட கால இரைப்பை அழற்சி ஏற்படுவது அறியப்பட்டுள்ளது. இன்றுஉலகிலுள்ள வளர்ந்தோரில் 70% மக்கள் இந்த பற்றீரியாவின் தொற்றுக்கு ஆளாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது. இந்நிலையில் இந்த பற்றீரியாவை அழிப் பதற்குரிய நுண்ணுயிர் கொல்லிச் சிகிச்சை வைத்தியர் மேற்பார்வையின் கீழ் மேற் கொள்ளப்பட வேண்டும்.

தோற்றுவித்த காரணி எதுவாக இருந்தாலும் நீண்டகால இரைப்பை அழற்சிக்கு ஆளானவர்களில் இரைப்பை யின் உட்புற மென்சவ்வுப் படை சிதை வடைந்திருக்கும். குறிப்பாக சமிபாட்டுக் குத் தேவையான ஐதரோகுளோரிக் அமிலத்தையும் பெப்சின் என்னும் நொதி யத்தையும் சுரக்கின்ற சுரப்பி இழை யங்கள் பெருமளவில் சிதைவடைந்து போயிருக்கும்.

நோய் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த தவறுகள் நீண்ட காலமாக இடம் பெற்றிருந்தால் இரைப்பையின் சுரப் பிகள் முற்றாகவே சிதைந்து போயிருக்கக் கூடும். இந் நிலையில் பூரண சுகத்தைப் பெற்றுக்கொள்வது சாத்தியமல்ல. மாறாக, இரைப்பையின் மென்சவ்வுப் படை சிதைவடையாது அதில் வீக்கம் மாத்திரம் ஏற்பட்டிருந்தால் உரிய சிகிச் சைகள் மூலம் நிவாரணம் பெற வழி யுண்டு. இதற்காக வைத்திய உதவி நாடப் பட வேண்டும்.

நெடுங்கால இரைப்பை அழற்சி ஏற்படாமல் தவிர்த்துக் கொள்வதற்குப் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:

1. எல்லா உணவுப் பொருட்களை யும் நன்றாக மென்று மெதுவாகச் சாப் பிடுங்கள். அவசர அவசரமாக விழுங்க வேண்டாம்.

2. நேர ஒழுங்குப்படி சாப்பிடுங் கள். இடை நேரங்களில் சாப்பிடா தீர்கள்.

3. உணவுட்கொள்ளும் போது நீரையோ வேறு பானங்களையோ அதிகளவில் அருந்தாதீர்கள்.

4. கடுஞ் சூடான அல்லது குளி ரான நிலையில் பானங்களை அருந்தா தீர்கள்.

5. பசி முற்றாகத் தீரும் வரை (வயிறு நிரம்பும் வரை) சாப்பிடாதீர் கள்.

6. ஒவ்வொரு உணவு வேளைக் கும் இடையில் ஆகக்குறைந்தது ஐந்து மணித்தியால இடைவெளியாவது இருக்கும்படி கவனித்துக் கொள்ளுங் கள்.

7. சாப்பிட்ட பின் ஆகக்குறைந்தது அரை மணி நேரமாவது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.

8. கோபம், கவலை போன்ற மனவெழுச்சிக் குழப்பங்களைத் தவிர்த் துக் கொள்ளுங்கள்.

9. வெவ்வேறு வகையான உண வுகள் உங்கள் இரைப்பையின் மீது ஏற்படுத்தும் தாக்கங்களைக் கவனமாக அவதானித்து வாருங்கள். உங்களுக்கு ஒத்துவராத உணவுகளை இனங்கண்டு அவற்றை முற்றாகவே தவிர்த்துக் கொள்ளப் பழகுவது மிக நல்லது.

நீண்ட கால இரைப்பை அழற்சி யினால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர் மேற் குறிப்பிட்ட நடைமுறைகளை ஒரு மாத காலத்திற்குப் பின்பற்றி வந்த பின்னரும் அவருக்குக் குறிப்பிடத்தக்க நிவாரணம் கிடைக்காது போனால், அவர் உடனடி யாக வைத்திய ஆலோசனையை நாட வேண்டும். ஏனெனில், இரைப்பையில் புற்று நோய் ஏற்பட்டாலும் இதே போன்ற அறிகுறிகள் தோன்றலாம். எனவே இந்த விடயத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. ■

# கிளேமோர் கண்ணிவெடி என்றால் என்ன?

**கேள்வி: கிளேமோர் கண்ணி வெடித் தாக்குதல்கள் பற்றி அடிக் கடி கேள்விப்படுகிறோமே. இந் தக் கண்ணி வெடி பற்றிய விபரங் களைத் தெரிந்து கொள்ளலாமா?**

ஏ. எல். சாதிகீன்-வாழைச்சேனை

பதில்: இராணுவப் படையணி களுக்கு எதிராகப் பயன்படுத்தும் நோக்குடன் ஐக்கிய அமெரிக்காவே முதன்முதலாகத் தயாரித்து அறிமுகப் படுத்தியது. அமெரிக்க இராணுவத் தில் இவை 'M18 A1' என்ற குறியீட் டுப் பெயரினாலேயே அழைக்கப் படுகின்றன.

கிளேமோர் கண்ணிவெடிகள் மிஸ்னே-ஸ்கார்டின் விளைவு (Misz-nay- Schardin effect) என்ற பௌதிக வியல் தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்டே செயற்படுகின் றன. ஏதேனும் வெடிபொருளொன் று உலோகத்தினாலான பொரு ளொன்றுடன் தொடுகையுற்ற நிலை யில் வெடிக்குமானால் உலோகம் இருக்கும் திசைக்கு எதிர்த்திசை நோக்கியே அவ்வெடிப்பின் விசை செயற்படும் என்பதே இத்தத்துவ மாகும். இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் மிஸ்னே என்ற ஹங்கேரிய விஞ்ஞா னியும் ஸ்கார்டின் என்ற ஜெர்மன் விஞ்ஞானியும் தனித்தனியே இவ் வுண்மையைக் கண்டுபிடித்தனர்.

யுத்த டாங்கிகளுக்கு எதிரான ஆயுதமொன்றை இதனடிப்படை யில் தயாரிப்பதற்கு ஸ்கார்டின் முயற் சிகளை மேற்கொண்டிருந்தார். எனி னும் 1945இல் உலகப்போர் முடி வடைந்த வேளையிலும் அவரது முயற்சி பூர்த்தியடையாத நிலை யிலேயே இருந்தது.

1952இல் கொரிய யுத்தத்தின் போது சீனத் துருப்புக்கள் பெரும் எண்ணிக்கையில் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன. இந்த நிலை யில் சீனப் படையணிகளுக்கு எதிரா கப் பயன்படுத்துவதற்கென M18 என் ற கண்ணிவெடியை ஐக்கிய அமெ ரிக்கா விருத்தி செய்தது. ஸ்கார்டின் ஏற்கனவே விருத்தி செய்திருந்த சாதனத்தின் வடிவமைப்பை அமெ ரிக்கா இதற்காகப் பயன்படுத்திக் கொண்டது.

கண்ணிவெடியை வடிவமைப் பதில் Norman A.Macleod என்ற ஸ்கொட்லாந்து நாட்டவர் பிரதான பங்கை வகித்தார். அவரே Claymore என்ற பெயரை இவ்வகைக் கண்ணி வெடிக்கு வழங்கினார் எனக் கருதப் படுகிறது. Claymore என்ற பெயர் ஸ்கொட்லாந்தில் பயன்படுத்தப் பட்டு வந்த அகன்ற அலகுடைய போர்வாளைக் (sword) குறிக்கவே முன்னர் உபயோகிக்கப்பட்டது.

கிளேமோர் கண்ணிவெடிகள் ஏனைய கண்ணிவெடிகளைப் போல் நிலத்தில் புதைத்து வைக்கப்படு வதில்லை. மாறாக, அவை தரைக்கு மேல் சிறிது உயரத்திலிருந்தே வெடிக்கச் செய்யப்படுகின்றன. அவை வெடிக்கும் போது நூற்றுக் கணக்கான உருக்குக் குண்டுகள் 60 பாகை கொண்ட வில் வடிவில் முன் நோக்கி விசையுடன் எறியப்படுகின் றன.

வியட்னாம் போரில் பயன் படுத்துவதற்காக 1960இல் அமெரிக்க




இராணுவம் M18 -A1 என்ற நியம வடிவமுடைய கண்ணிவெடியை உருவாக்கியது. M18, M18-A1 ஆகிய இரண்டும் தோற்றத்திலும் செயற்பாட்டிலும் ஒத்தவையே. M18 -A1 ஒலிவ் நிறமுடைய பிளாஸ்டிக் கவசமொன்றைக் கொண்டுள்ளது. அதன் வெடிக்கும் பக்கத்தில் "Front Toward Enemy" (முன்பக்கம் எதிரியை நோக்கி) என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கும்.

இந்த வகைக் கிளேமோர் கண்ணிவெடி 21.5 cm நீளமும் 8 cm உயரமும் 3.5 cm ஆழமும் கொண்டது. தேவையான அளவுக்கு நீட்டிக் கொள்ளக்கூடிய இரண்டு தொகுதிக் கால்கள் அதற்கு இருக்கும். பிளாஸ்டிக் கவசத்தின் உள்ளே பின்பகுதியில் வளைக்கப்பட்ட உருக்குத் தகடொன்று பொருத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்னால் 680 கிராம் பிளாஸ்டிக் வெடிபொருளும் 700 சிறிய உருக்குக் குண்டுகளும் வைக்கப்பட்டிருக்கும். அத்தோடு அதன் மேற்பகுதியில் பார்வை மூலம் இலக்கைச் சரியாக நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய நுட்பமுறையொன் றும் காணப்படும்.

M18-A1 வகை கிளேமோர் கண்ணிவெடியொன்று வெடிக்கச் செய்யப்படும்போது 700 உருக்குக் குண்டுகளும் 60 பாகைக் கோணமுடைய விசிறி வடிவில் (வில் வடிவில்) எறியப்படுகின்றன. இந்த வில் 2m உயரமும் கிடையாக 50m தூரத்தில் 50m அகலமும் கொண்டதாக இருக்கும்.

வெடித்த இடத்திலிருந்து முன்புறத் திசையில் 50m தூரம் வரை கடுமையான உயிர்ச் சேதத்தை உருக்குக் குண்டுகள் ஏற்படுத்தும். 100m தூரம் வரை கணிசமான சேதம் ஏற்படலாம். பொதுவாகக் குண்டுகள் 250m தூரம் வரை செல்லக்கூடும். அதற்கப்பால் இதன் தாக்கம் புறக்கணிக்கத்தக்கதாவே இருக்கும். அதேவேளை கண்ணிவெடியின் பின்புறத் திசையில் குறிப்பிடத்தக்க பாதிப்பு எதுவும் ஏற்படாதது கவனிக்கத்தக்கது. எனவே பின்புறமாகச் சிறிது தூரத்திலிருந்தே அதனை எவரும் வெடிக்கச்செய்ய முடியும்.

கிளேமோர் கண்ணிவெடிகளை வெடிக்கச் செய்வதற்குப் பல வகையான உத்திகளைக் கையாளலாம். படையினர் தமது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் அதனை வெடிக்கச் செய்ய முடியும். கண்ணிவெடியின் வீச்சு எல்லைக்குள் எதிரிகள் வந்ததும் அதனை ஒருவர் மின்முறையிலோ அல்லது வேறு முறையிலோ வெடிக்கச் செய்யலாம். இம்முறையில் தவறுதலாக வெடித்து அப்பாவிகள் பலியாக வழியேற்படாது.

எதிரி குறித்த எல்லைக்குள் வந்ததும் தன்னையறியாமலே தனது செயற்பாட்டினால் கண்ணிவெடியை இயக்கச்செய்கின்ற முறைகளும் உண்டு. எதிரியின் உடலசைவுகள், அவரெழுப்பும் ஓசைகள் முதலியன கண்ணிவெடியை வெடிக்கச் செய்யும் நுட்பமுறைகள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த முறையில் அப்பாவிப் பொதுமக்கள் கூடப் பலியாவதற்குச் சாத்தியங்கள் நிறைய உண்டு.

குறித்த கால தாமதத்தின் பின்னர் வெடிக்கக்கூடிய முறையிலும் கிளேமோர் கண்ணிவெடிகளைப் பொருத்த முடியும். உதாரணமாக எதிரிகள் பின்தொடர்ந்து வரும் சந்தர்ப்பத்தில் அவர்கள் வருகின்ற திசை நோக்கிக் கண்ணிவெடியைப் பொருத்தி அதன் திரியைக் கொளுத்திவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்று விடலாம். குறித்த கால தாமதத்தின் பின்னர் அது வெடித்துச் சேதத்தை ஏற்படுத்தும்.

பொதுவாக நேரடியாகப் படையினரைக் கொல்வதற்கெனக் கிளேமோர் கண்ணிவெடிகள் பயன்படுத்தப் பட்டாலும் பஸ் வண்டிகள், ட்ரக் வண்டிகள் போன்ற மெல்லிய கவசமுடைய வாகனங்களுக்கும் பெரிய அளவில் சேதத்தை இவை ஏற்படுத்தலாம்.

இலங்கை போன்ற நாடுகளில் கிளேமோர் கண்ணிவெடிகளை நிலத்தின் மீது வைக்காமல் மரங்களில் பொருத்தி வைப்பதும் உண்டு. இவ்வாறு வெடிக்கச் செய்யும் போது வெடிப்பின் விசை தரையினால் உறிஞ்சப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம். இதன்மூலம் உச்ச அளவில் சேதத்தை ஏற்படுத்த முடியுமாகிறது.

ஐக்கிய அமெரிக்காவின் கிளேமோர் கண்ணிவெடிகளை ஒத்த சாதனங்கள் இப்போது பல நாடுகளில் தயாரிக்கப்படுகின்றன. ரஷ்யாவின் Mon-50, சீனாவின் Type-66, தென் கொரியாவின் KM18-A1, இஸ்ரவேலின் No.6, பாகிஸ்தானின் P5 MK1, தென்னாபிரிக்காவின் Shrapnel mine No.2, வியட்னாமின் MDH-C40 என்பன இவ்வகையான கண்ணிவெடிகளே. இவை யாவும் பொதுவாகக் கிளேமோர் என்ற பெயரினாலேயே அழைக்கப்படுகின்றன.

கண்ணிவெடிகள் தொடர்பாக 1996ம் 1997ம் ஆண்டுகளில் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளின்படி கண்ணிவெடிகளைத் தயாரிப்பது, களஞ்சியப்படுத்தி வைப்பது, பரிமாறிக்கொள்வது, உபயோகிப்பது ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. கிளேமோர் கண்ணிவெடிகள் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வெடிக்கச் செய்யப்படும் போது பொதுமக்கள் பலியாகும் சாத்தியம் இல்லையாதலால் அதனைப்பயன்படுத்துவது சட்டவிரோதமான செயலல்ல என ஐக்கிய அமெரிக்கா உட்பட்ட சில நாடுகள் வாதிட்டு வருகின்றன. ஐக்கிய அமெரிக்கா மேற்குறிப்பிட்ட 1997ம் ஆண்டின் உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்துவிட்டதும் குறிப்பிடத் தக்கது.

தற்போது, உலகிலே வருடந்தோறும் சுமார் 20,000 பேர் கண்ணிவெடிகளுக்குப் பலியாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ■

*"உனக்குச் சார்பாகப் பொய் சொல்லுகிறவன் நிச்சயமாக உனக்கு எதிராகவும் பொய் சொல்வான்." – பொஸ்னிய நாட்டுப் பழமொழி*

# தேங்காய் எண்ணெய் உடலுக்குத் தீங்கு விளைவிக்குமா?



**கேள்வி: தேங்காய் எண்ணெயை உணவில் சேர்த்துக் கொள்வது உடலாரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்குமா? விளக்கம் தேவை**

எம். எஸ். ஸமீர் - பாணந்துறை

*பதில்:* கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தேங்காய் எண்ணெயின் மீது பல பழிகள் சுமத்தப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக எமது குருதியில் கொலஸ்ட்ரோலின் அளவை அதிகரிக்கச் செய்வதிலும் இதயத்தில் முடியுருநாடி தொடர்பான நோயை (Coronary Heart Disease -CHD) ஏற்படுத்துவதிலும் தேங்காய் எண்ணெய் முக்கிய பங்கு வகிப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

பொதுவாக நிரம்பிய கொழுப்புக்களே (saturated fats) குருதியில் கொலஸ்ட்ரோலை அதிகரிக்கச் செய்கின்றன என்றும் கொலஸ்ட்ரோலின் அளவில் ஏற்படும் அதிகரிப்பே முடியுரு நாடி தொடர்பான இதயக் கோளாறை ஏற்படுத்துகின்றது என்றும் ஆரம்ப கால ஆய்வுகள் எடுத்துக் காட்டியிருந்தன. இக்கருத்து உலகெங்கும் பரவியதனால் மக்கள் நிரம்பிய கொழுப்புக்களைப் பயத்துடனேயே நோக்கலாயினர்.

எனினும் மேற்குறித்த ஆய்வுகள் தொடர்பாகப் பல சந்தேகங்கள் பிற்காலத்தில் எழுப்பப்பட்டுள்ளன. பரிசோதனைத் தரவுகளுக்குத் தவறான முறையில் விளக்கம் கொடுத்தல், தகவல்களைத் திரிபுபடுத்தல் போன்ற காரணங்களாலேயே இந்தக் கருத்து வலுப்பெற்றுள்ளதாகப் பல ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

*1953 - 1957* காலப் பகுதியில் Ancel Keys என்ற ஆய்வாளரே ஐக்கிய அமெரிக்காவில் நிரம்பிய கொழுப்புக்களுக்கு எதிரான பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்தார். இவரது கூற்றுக்கள் சிலவேளைகளில் ஒன்றுக்கொன்று முரண்படுவனவாக இருந்த போதிலும் நிரம்பிய கொழுப்புக்கள் உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கானவை என்ற கருத்தை வலியுறுத்துவதில் இவர் வெற்றி பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவில் சூரிய காந்தி, சோயா, சோளம் போன்ற பல்வேறு மூலப்பொருட்களில் இருந்து உண்ணத் தகுந்த எண்ணெய்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த கம்பனிகள் Ancel Keys இன் கருத்துக்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன.

இக்கம்பனிகளின் அயராத தூண்டுதலின் காரணமாக அமெரிக்க அரசாங்கமும் போசணை பற்றிய தனது கொள்கைகளிலும் சிபாரிசுகளிலும் நிரம்பிய கொழுப்புக்கள் இதய நோய்க்குக் காரணமாக அமைகின்றன என்ற கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது.

இதனையடுத்து அமெரிக்காவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் நிரம்பிய கொழுப்புக்கு எதிரான பிரச்சாரம் தீவிரமாக முடுக்கிவிடப்

பட்டது. இதில் அரச மற்றும் தனியார் ஏஜன்ஸிகள் பங்கெடுத்தன.

இந்தப் பிரச்சாரத்திற்குத் தேங்காய் எண்ணெய் பலியாகியது. தேங்காய் எண்ணெய் நிரம்பிய கொழுப்புக்களைக் கொண்டிருப்பதனால் அதனை உணவில் பயன்படுத்துவது கூடாது என்றும் அதற்குப் பதிலாக சூரியகாந்தி, சோயா, சோளம் போன்றவற்றிலிருந்து தயாரிக்கப் பட்ட எண்ணெய்களைப் பயன்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்தக் கருத்துக்களுக்குச் சவால் விடுக்கவோ அல்லது ஆய்வுகள் மூலம் மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கவோ தகுதியில்லாதவர்களாக நாம் இருந்ததனால் நாமும் இவற்றையெல்லாம் விழுங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. உள்ளூரில் உற்பத்தியாகும் தேங்காய் எண்ணெயைப் புறக்கணித்துவிட்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் வேறு தாவர எண்ணெய்களைப் பயன்படுத்தத் தொடங்கினோம்.

ஆனால் உண்மையை எந்த நாளும் மறைத்து வைக்க முடியாதே. மிக அண்மைக் காலத்தில்தான் இது பற்றிய உண்மைகள் தெளிவாகத் தொடங்கியுள்ளன.

*American Journal of Public Health (1990)* என்ற வெளியீட்டில் ஆசிரியர் தலையங்கம் எழுதிய ஹாவார்ட் பல்கலைக்கழகத்தின் Walter Willet என்ற வைத்திய நிபுணர் "நிரம்பிய கொழுப்புக்களை உட்கொள்வது குறைக்கப்பட வேண்டும் எனப் பொதுவாகச் சிபாரிசு செய்யப்படுகின்ற போதிலும், முடியுரு நாடி தொடர்பான இதய நோய்க்கும் (CHD) நிரம்பிய கொழுப்பு உட்கொள்ளப்படுவதற்கும் இடையில் எவ்விதத் தொடர்பையும் இதுவரை நடாத்தப்பட்டுள்ள எந்தவொரு ஆய்வும் தெளிவாக எடுத்துக்காட்டியதில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதே கருத்தைப் பல ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். நிரம்பிய கொழுப்புக்களை உட்கொள்ளும் போது குருதியின் கொலஸ்ட்ரோல் மட்டம் குறைவதாகவும் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது எப்படியிருந்த போதிலும் சுத்தமான தேங்காய் எண்ணெயை உணவுடன் சேர்ப்பதால் கொலஸ்ட்ரோல் மட்டத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் ஏற்படுவதில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேங்காய் எண்ணெயைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் மக்களிடையே Kaunitz மற்றும் Dayrit என்போர் 1992இல் நடத்திய ஆய்வின்படி தேங்காய் எண்ணெயை உணவில் சேர்த்துக் கொள்வது கொலஸ்ட்ரோல் அதிகரிப்புக்கோ CHD வகை இதய நோய்க்கோ வழிவகுப்பதில்லை என்பது தெரிய வந்தது.

தேங்காய் எண்ணெயிலுள்ள லோரிக் அமிலம் (Lauric acid) மனித உடலுக்கு மிக உகந்ததாகும். இதிலிருந்து உருவாகும் monolaurin என்ற பதார்த்தம் நோய்களை உருவாக்கக்கூடிய வைரஸ்களையும் பற்றீரியாவையும் அழிக்கவல்லது. எனவே தேங்காய் எண்ணெயை உட்கொள்வது மேற்குறித்த நுண்ணங்கிகளில் இருந்து உடலைப் பாதுகாத்துக்கொள்ள உதவும் என்கின்றனர் ஆய்வாளர் கள்.

இதய அடைப்பை ஏற்படுத்தும் முடியுரு நாடிக் கோளாறைத் தோற்றுவிப்பதில் Herpes virus, Cytomegalovirus ஆகிய வைரஸ் இனங்கள் பங்குபற்றுவதாக இப்போது தெரிய

வந்துள்ளது. தேங்காய் எண்ணெயில் இருக்கும் லோரிக் அமிலம் இந்த வைரஸ்களிலிருந்து பாதுகாப்பை வழங்கக் கூடியது. இந்த வகையில் நோக்கும் போது CHD வகை இதய நோய்களைத் தடுப்பதற்குத் தேங் காய் எண்ணெய் உதவக்கூடும் என நம்பப்படுகிறது.

இது தவிர பெருங்குடற் புற்று நோய், மார்பகப் புற்றுநோய் போன்ற புற்றுநோய் வகைகள் பலவற் றைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேங் காய் எண்ணெயிலுள்ள லோரிக் அமிலம் உதவுவதாகப் பல ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

தேங்காய்த் துருவல், தேங் காய்ப்பால், தேங்காய் எண்ணெய் என்பவற்றிலிருந்து நாம் எமது உட லுக்குத் தேவையான லோரிக் அமி லத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். வளர்ந்த ஒருவருக்குத் தினமும் 10 - 20 கிராம் லோரிக் அமிலம் தேவைப் படுகிறது.

எனவே தேங்காய் எண்ணெய் உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்காது என்பதே எமது கருத் தாகும். எனினும் எதனையும் அள வுக்கு மிஞ்சி உபயோகிப்பது நல்ல தல்ல என்பதை நாம் மறக்கக்கூடாது. அத்தோடு நாம் கடைகளிலிருந்து கொள்வனவு செய்வது சுத்தமான தேங்காய் எண்ணெய்தானா என் பதை நிச்சயப்படுத்திக் கொள்வதும் அவசியம். இன்று கலப்படம் செய் யப்பட்ட எண்ணெய்களே பெருமள வில் சந்தைக்கு வருகின்றன. ■

## ஆலோசனை

ஒருவர் சுகவீனமுற்றிருந்த தனது மனைவியை வைத்தியரிடம் அழைத்துச் சென்றார். அப்பெண்ணைப் பரிசோதித்த வைத்தியர் இரத்தப் பரிசோதனை ஒன்று செய்தால்தான் நோய் என்னவென்று கண்டுபிடிக்கலாம் என்று கூறி விட்டார். எனவே பரிசோதனைக்காக இரத்தத்தை வழங்கிவிட்டு இருவரும் வீடு திரும்பினர்.

இரத்தப் பரிசோதனையின் முடிவுகளை அறிந்துகொள்ளவதற்காக ஒரு வாரத்தின் பின்னர் வைத்தியரிடம் போனார் அக்கணவர். அவரைக் கண்ட வைத்தியர், "ஐயா ஒரு சிறு குழப்பம் நடந்துவிட்டது. உங்கள் மனைவியின் இரத்தமும் இன்னொரு பெண்ணின் இரத்தமும் சரியாகப் பெயர் குறிப் பிடப்படாமல் இருக்கின்றன. எது எவருடையது என்பது சரியாகத் தெரிய வில்லை. அதில் ஒருவருக்கு எயிட்ஸ் நோயும் மற்றவருக்கு கடும் ஞாபக மறதியை ஏற்படுத்துகின்ற அல்ட்ஸ்ஹைமர் நோயும் இருக்கின்றன. அதில் உங்கள் மனைவிக்கு இருப்பது எந்த நோய் என்று நிச்சயமாகக் கூற முடியவில்லை. மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டி வரும்" என்றார்.

மீண்டும் இரத்தப் பரிசோதனைக்கு உட்படத் தன் மனைவி உடன்பட மாட்டாள் எனக்கூறினார் அந்த மனிதர்.

"அப்படியானால் உங்களுக்கு ஒரு ஆலோசனை சொல்கிறேன். உங்கள் மனைவியைக் காரில் அழைத்துச் சென்று நகர மத்தியில் எங்காவது ஓரிடத்தில் இறக்கிவிட்டு நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். உங்கள் மனைவி ஞாபகத் துடன் வீட்டைத் தேடிக்கொண்டு வந்தால் அவளை ஒதுக்கி வைத்துவிடுங்கள்" என்றார் வைத்தியர்.



# புரூனை

(Brunei)

பெற்றோலிய வளம் மிகுந்த நாடான புரூனை, தென் கிழக்கு ஆசியாவிலுள்ள போர்னியோ (Borneo) என்ற தீவின் வட பகுதியில் அமைந்திருக்கிறது. இந்நாடு போர்னியோவிலுள்ள மலேஷியாவின் ஸரவாக் மாநிலத்தினால் சூழப்பட்டிருக்கிறது. புரூனை நாடானது ஒன்றோடொன்று தரைவழித் தொடர்பற்ற இரண்டு நிலப் பகுதிகளால் ஆக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளுக்கிடையில் மலேஷியாவின் ஸரவாக் மாநிலத்திற்குச் சொந்தமான நிலப் பிரதேசம் இருக்கின்றது.

புரூனையின் உத்தியோகபூர்வப் பெயர் 'நெகாரா புரூனை தாருஸ்ஸாம்' (சாந்தியின் இல்லமான புரூனை தேசம்) என்பதாகும். இதன் எல்லைகளாக வடக்கில் தென் சீனக் கடலும் ஏனைய திசைகளில் மலேஷியாவின் ஸரவாக் மாநிலமும் அமைந்திருக்கின்றன. இந்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 5,770 சதுர km மாத்திரமே.

15ம் நூற்றாண்டு முதல் 17ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் புரூனை இராச்சியத்தின் செல்வாக்கும் அதிகாரமும் உச்ச நிலையை அடைந்திருந்தது. அக்காலத்தில் முழு போர்னியோத் தீவும் பிலிப்பைன்ஸின் தென் பகுதியிலுள்ள சில தீவுகளும் புரூனை ஸுல்தானின் ஆட்சியின் கீழ் இருந்தன. எனினும் காலப்போக்கில் அரசுரிமை தொடர்பான உள்நாட்டுப் பிணக்குகள், ஐரோப்பிய அரசுகளின் காலனித்துவ விரிவாக்கம், கடற்கொள்ளையர்களின் அட்டகாசம் என்பவற்றின் காரணமாக இவ்வாதிக்கம் நலிந்து போயிற்று.

புரூனையின் ஸுல்தானாக இருந்த இரண்டாவது ஓமர் அலி ஸைபுத்தீன் என்பவர் ஸரவாக் பகுதியை பிரிட்டிஷ் தளபதி ஒருவருக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். ஸரவாக்கின் ராஜா என்ற பெயரோடு அப்பகுதியை நிர்வகித்து வந்த வெள்ளை ஆட்சியாளர் சிறிது சிறிதாக போர்னியோத் தீவின் பல பகுதிகளைத் தன்வசமாக்கிக் கொண்டார். இதன் விளைவாக இன்று காணப்படும் நிலப்பரப்பின் அளவே புரூனை ஸுல்தானுக்கு எஞ்சியிருக்கலாயிற்று.

1888 முதல் புரூனை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பைப் பெற்ற பிரதேசமாக மாறியது. புரூனையின் ஸுல்தான் நாட்டின் தலைவராக விளங்கிய போதிலும் நாட்டு நிர்வாகத்தில் பிரிட்டிஷ் அரசின் செல்வாக்கே மிகைத்திருந்தது. இந்நிலை 1984 வரை நீடித்தது.

1984 ஜனவரி 1ம் தகதி புரூனை பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது. எனினும் பிரிட்டிஷ் பாதுகாப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட தினமான பெப்ரவரி 23ம் திகதியே நாட்டின் தேசிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.

புரூனையின் கடற்கரையோரம் 161 km நீளமுடையது. இப்பகுதி சம வெளியாகவும் கிழக்குப் பிரதேசம் மலைப்பாங்கானதாகவும் காணப் படுகின்றது. நாட்டின் மேற்குப் பகுதி குன்றுகளைக் கொண்ட தாழ்நில மாக இருக்கிறது. புரூனையின் மிக உயர்ந்த புள்ளி பூகிட் பாகொன் (உய ரம் 1,850 m ) என்னும் சிகரமாகும்.

பசிபிக் சமுத்திரத்தை இந்து சமுத்திரத்தோடு தொடுக்கும் தென் சீனக் கடற் பிரதேசம் புரூனைக்கு நெருக்கமாக இருக்கிறது. இக்கடற் பகுதி சர்வதேசக் கப்பல் போக்கு வரத்தில் அதிக முக்கியத்துவம் உடை யது. புரூனையிடமும் எட்டு வர்த் தகக் கப்பல்கள் இருக்கின்றன.

புரூனையில் வெப்ப வலயத் திற்குரிய சூடும் ஈரலிப்பும் கொண்ட காலநிலை காணப்படுகின்றது. இங் கு எல்லாக் காலங்களிலும் மழை பெய்கிறது. பொதுவாக ஒக்டோபர் முதல் மார்ச் வரையிலான பருவப் பெயர்ச்சிக் காலத்தில் அதிக மழை வீழ்ச்சி இடம்பெறுகிறது.

அடர்த்தியான வெப்பவலயக் காடுகளால் நாட்டின் உட்பகுதி மூடப்பட்டிருக்கிறது. புரூனையின் மொத்த நிலப்பரப்பில் 33%க்கு மேல் காடுகளே காணப்படுகின்றன. இவற்றில் பல குரங்கு இனங்களும் பெருந்தொகையான பறவை இனங்களும் வாழ்கின்றன.

2006 ஜூலை மதிப்பீட்டின்படி புரூனையின் சனத்தொகை 379,444 ஆகும். இதன்படி சராசரி சனத் தொகை அடர்த்தி சதுர kmக்கு 71 பேர். புரூனையின் கிழக்கு நிலப்பரப் பில் சுமார் 10,000 பேர் மட்டுமே வசிப்பது குறிப்பிடத்தக்கது. சனத் தொகை வளர்ச்சி வீதம் 1.87 எனக் கணிக்கப்பட்டுள்ளது. மக்களில் மலாய் இனத்தவர்கள் 67%, சீனர்கள் 15%, சுதேச இனத்தவர்கள் 6%, ஏனையோர் 12% காணப்படுகின் றனர்.

புரூனையின் உத்தியோகபூர்வ சமயமாக இஸ்லாம் இருக்கிறது. சனத்தொகையில் 67% மக்கள் இச் சமயத்தைச் சேர்ந்தவர்கள். அத்தோடு 13% சீன பௌத்தர்களாகவும் 10% கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர். 13% மக்கள் வேறு சமயங்களைப் பின் பற்றுகின்றனர்.

இந்நாட்டின் அரசகரும மொழி யாக மலாய் (பாஷா மெலாயு) விளங்குகிறது. எனினும் பெரும்பா லான மக்கள் இம்மொழியைப் பெரி தும் ஒத்த புரூனை மொழியையே தாய்மொழியாகக் கொண்டிருக் கின்றனர். சீன வம்சாவழியினர் சீன மொழியையும் ஆங்கிலத்தையும் பயன்படுத்துகின்றனர். பாடசாலை களில் மலாய் மொழியும் ஆங்கில மும் உபயோகிக்கப்படுகின்றன. பதினைந்து வயதுக்கு மேற்பட்ட மக்களில் 93.9 பேர் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக உள்ளனர்.

புரூனையின் தலைநகர் பந்தர் ஸெரி பெகவான் (Bandar Seri Begawan) என்பதாகும். சுமார் 50,000 மக் கள் இந்நகரில் வாழ்கின்றனர். இத னைத் தவிர துறைமுக நகரான முவாரா, பெற்றோலிய உற்பத்தி மையமான ஸியெரா, குவாலா பெலய்த் என்பன முக்கிய நகரங் களாக இருக்கின்றன. பனாகா (Panaga) என்ற பகுதியில் ஐரோப் பியர்கள் கூடுதலாக வசிக்கின்றனர்.

புரூனையின் பொருளாதாரம் பெற்றோலிய உற்பத்தியை அடிப் படையாகக் கொண்டுள்ளது. நாட் டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் இத்துறையின் பங்களிப்பு 40%க்கு

மேற்பட்டது. புரூனையின் மொத்தத் தேசிய உற்பத்தி சுமார் 7 பில்லியன் டொலர்கள். இதன்படி தலா வருமானம் 23,600 டொலர்கள். ஏனைய மூன்றாம் உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இது மிக உயர்ந்த பெறுமானமாகும். 1980களில் உலகிலேயே மிகக் கூடிய தலா வருமானம் கொண்ட நாடுகளுள் ஒன்றாக புரூனை விளங்கியது. தற்போதும் புரூனை ஸுல்தான் உலகின் மிகப்பெரிய செல்வந்தர்களுள் ஒருவராக இருப்பது குறிப்பிடத் தக்கது.

பெற்றோலியம், இயற்கை வாயு என்பவற்றோடு அரிசி, மரக்கறிகள், பழங்கள், கோழியிறைச்சி, முட்டை என்பனவும் அங்கு உற்பத்தியாகின்றன. எனினும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய், இயற்கை வாயு ஆகியவையே பிரதான ஏற்றுமதிப் பண்டங்களாக உள்ளன. பெற்றோலிய ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தைப் பிறநாடுகளில் முதலீடு செய்வதன் மூலமும் வெளிநாட்டுச் செலவாணி சம்பாதிக்கப்படுகிறது. புரூனையின் நாணயம் புரூனை டொலர் எனப்படும்.

மருத்துவ சேவைகள், பல்கலைக் கழகம் வரையிலான கல்வி என்பன மக்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகின்றன. அத்தோடு வீடுகள், அரிசி என்பன அரச உதவியுடன் சலுகை விலையில் கொடுக்கப்படுகின்றன.

புரூனையில் சுமார் 2,525 km நீளமான செப்பனிடப்பட்ட பாதைகள் உள்ளன. ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உண்டு. தலைநகருக்கு அண்மையில் நாட்டின் சர்வதேச விமான நிலையம் அமைந்திருக்கிறது. புரூனையின் தேசிய விமான சேவை Royal Brunei Airlines என அழைக்கப்படுகிறது.



**ஸுல்தான் ஹஸனல் போல்கியா**

அரசுத் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் (பிரதமராக) ஸுல்தான் இருக்கிறார். தற்போதைய ஸுல்தானான *ஹஸனல் போல்கியா* 1967 ஒக்டோபர் 5ம் திகதி முதல் ஆட்சியில் இருந்து வருகிறார். இந்நாட்டில் பொதுத் தேர்தல்கள் இடம்பெறுவதில்லை. ஸுல்தானினால் நியமிக்கப்பட்ட 29 பேர் கொண்ட சட்ட சபையொன்று இருக்கிறது. இச்சபைக்கு எந்தவித சட்டவாக்க அதிகாரமும் இல்லை. வெறும் ஆலோசனைச் சபையொன்றாகவே அது செயற்படுகின்றது. சில அரசியல் கட்சிகள் அங்கிருந்த போதிலும் அவை செல்வாக்கு அற்றனவாகவே காணப்படுகின்றன. எனவே ஆசியாவில் அரசியல் உறுதித்தன்மை மிக்க நாடொன்றாக புரூனை திகழ்கின்றது.

இங்கிலாந்தின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொதுச் சட்ட முறையொன்று புரூனையில் காணப்படுகின்றது. எனினும் முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் சில துறைகளில் ஷரீஆச் சட்டங்கள் அமுலில் உள்ளன. மதுபான விற்பனை, பகிரங்க இடங்களில் மது அருந்துதல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

# ஆப்ரஹாம் கோவூர்

# (Abraham Kovoor)



பகுத்தறிவாளர் சங்கம் (Rationalist Association) என்ற பெயரில் செயற்படும் ஓர் அமைப்பு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இருக்கிறது. விஞ்ஞான ஆய்வு முறைகள் மூலம் நிரூபிக்கப்பட முடியாத எதனையும் நம்ப முடியாது என்ற கோட்பாடுடையவர்களே இதன் உறுப்பினர்களாக இருக்கின்றனர். தெய்வீக சக்தியுள்ளவர்கள் எனக் கூறிக் கொள்வோர் புரிவதாகச் சொல்லப் படும் அற்புதச் செயல்களும், மாந்திரீகம், சூனியம், பேயோட்டுதல் போன்ற செயற்பாடுகளும் ஏமாற்று வித்தைகள் என்பதே இவர்களது கருத்தாகும். இறை நம்பிக்கையைப் பொறுத்தமட்டில் இவர்களுள் பெரும்பாலானோர் நாத்திகப் போக்குடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

இலங்கையிலுள்ள பகுத்தறிவாளர் சங்கத்தின் (முன்னைய Ceylon Rationalist Association) தலைவராக 1960 முதல் 1978 வரை பணியாற்றியவர் கேரளாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆப்ரஹாம் தோமஸ் கோவூர் என்பவராவார். சுயாதீன சிந்தனையாளராகவும், பகுத்தறிவாளராகவும், உளநோய் மருத்துவராகவும் இந்தியாவிலும் இலங்கையிலும் புகழ்பெற்றிருந்த இவரது சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அறிஞர்கள், பாமரர்கள் ஆகிய இரு சாரார் மத்தியிலும் சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தின.

ஆப்ரஹாம் கோவூர் 1898 ஏப்ரல் 10ம் திகதி தென் இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள திருவல்லா என்ற இடத்தில் பிறந்தார். இவரது தந்தையான கோவூர் தொம்ம காத்தனார் என்பவர் மலபாரிலிருந்த கிறிஸ்தவ ஆலயமொன்றின் பிரதம போதகராக இருந்தார். ஆப்ரஹாம் கோவூர் தனது ஆரம்பக் கல்வியை கேரளாவிலிருந்த கிறிஸ்தவ திருச்சபைப் பாடசாலையில் பெற்றார். பின்னர் தனது இளைய சகோதரர் பெஹனான் கோவூருடன் இணைந்து கல்கத்தா சென்று அங்கிருந்த Bengabasi College என்ற நிறுவனத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். ஆப்ரஹாம் கோவூர் தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார்.

சிறிது காலம் கேரளாவில் கனிஷ்ட பேராசிரியராகப் பணியாற்றிய பின்னர் கோவூர் இலங்கைக்கு வந்தார். இங்கு பல கல்லூரிகளில் தாவரவியல் ஆசிரியராகக் கடமையாற்றிய அவர் இறுதியில் கொழும்பு தர்ஸ்டன் கல்லூரியில் கடமை புரிந்தார். 1959இல் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் தனது வாழ்வு காலத்தை இலங்கைப் பகுத்தறிவாளர் சங்கத்தைக் கட்டியெழுப்புவதில் செலவு செய்தார்.

பேராசிரியர் கார்லோ பொன்ஸேகா வுடன் இணைந்து சங்கத்தின் கூட் டங்களைத் தர்ஸ்டன் கல்லூரியில் தொடர்ச்சியாக நடத்திவர கோவூர் தவறவில்லை. *The Ceylon Rationalist Ambassador* என்ற பெயரில் வருடாந்த வெளியீடொன்றையும் அவர் வெளியிட்டு வந்தார்.

1961இல் ஐரோப்பாவுக்குச் சென்ற கோவூர், சுயாதீன சிந்தனை யாளர்களின் உலக ஒன்றியம் (World Union of Freethinkers) என்ற அமைப் புடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். Narcissus என்ற புனைப் பெயரில் அவர் செய்தித்தாள் களுக்கும் சஞ்சிகைகளுக்கும் கட் டுரைகள் பலவற்றை எழுதினார். இக்கட்டுரைகளில் அற்புதச் செயல் கள், மாந்திரீகம், பேயோட்டுதல் போன்ற விடயங்களில் தான் அறிந் துகொண்ட உண்மைகளை அவர் விளக்கியிருந்தார். இவை இந்திய மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட் டன. இவற்றின் தமிழாக்கங்கள் நம் நாட்டுத் தினகரன் ஞாயிறு இதழில் தொடர்ச்சியாக வெளியாகி வாசகர் களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த் தன.

1960களிலும் 1970களிலும் கோ வூர் இந்தியாவில் பல சுற்றுப்பிர யாணங்களை மேற்கொண்டார். இப்பிரயாணங்களின் போதும் அவர் நூற்றுக்கணக்கான கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார். தர்க்கரீதி யான சிந்தனைகளும் விஞ்ஞான அணுகுமுறையும் ஒருங்கிணைந்த அவரது கவர்ச்சியான சொற்பொழி வுகள் இந்தியக் கிராமங்களிலும் நகரங்களிலும் மக்கள் மனதைப் பெரிதும் கவர்வனவாக அமைந்தன.

இந்திய பகுத்தறிவாளர் சங்கம் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட நான்கு சுற்றுலாக்களின்போது அற்புதச் செயல்களின் இரகசியங்களை அம் பலப்படுத்தும் வகையில் அவர் சொற்பொழிவாற்றினார். அங்கு தெய்வீக சக்தி கொண்டவர்கள் என மதிக்கப்படும் சாமியார்கள் செய்து காட்டுகிற அற்புதச் செயல்களுக்கு எதிராக அவர் துணிச்சலோடு சவால் விடுத்தார்.

இந்தியாவின் ஆந்திரா பிரதே சத்திலுள்ள புட்டபர்த்தி என்ற இடத்தில் வசிக்கும் ஸ்ரீ சத்யசாயி பாபா என்ற சாமியார் தமது பக் தர்கள் முன்னிலையில் பல அற்புதங் களை நிகழ்த்தி வந்தார். தமது வெறுங் கரத்தை மேலே உயர்த்தி மாயமான முறையில் விபூதியைப் பெற்று அதனை பக்தர்களிடையே வினியோகிப்பது அவரது அற்புதச் செயல்களுள் ஒன்றாக இருந்தது. இதே செயலைக் கோவூர் பகிரங் கமாகப் பல இடங்களில் செய்து காட்டி இது ஒரு கண்கட்டி வித்தை யே எனப் பிரகடனப்படுத்தினார். அத்தோடு நின்றுவிடாமல் தான் விதிக்கும் கட்டுப்பாட்டு நிலைமை களின் கீழ் அவ்வாறு விபூதியைப் பெற்றுக் காண்பிக்குமாறு சாயி பாபா அவர்களுக்குப் பலமுறை கடி தங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்தார்.

இவரது வேண்டுகோளை சாயி பாபா புறக்கணித்துவிட்டார். என வே 1976இல் இந்தியாவுக்கு மேற் கொண்ட தனது இறுதி விஜயத் தின்போது சாயி பாபா அவர்களை பெங்களூருக்கு அண்மையில் உள்ள வைட்பீல்ட் என்ற இடத்திலிருந்த அவரது ஆசிரமத்தில் நேரடியாகச் சந்தித்துத் தனது சவாலை முன் வைக்க கோவூர் முயற்சித்தார். எனி னும் கோவூர் அங்கு சென்றபோது

பாபா புட்டபர்த்தி ஆசிரமத்திற்குப் புறப்பட்டுப் போயிருந்தார்.

ஏமாற்று வேலைகள் செய்ய முடியாத கண்டிப்பான நிபந்தனைகளின் கீழ்த் தமது அற்புதச் செயல்களைச் செய்து காட்டுகின்ற அல்லது தனது தெய்வீக சக்தியை வெளிப் படுத்திக் காட்டுகின்ற எவருக்கும் ஒரு லட்சம் ரூபா பரிசளிப்பதாக 1963இல் கோவூர் அறிவித்திருந்தார். தமது பெயரைப் பிரபலப் படுத்திக்கொள்ளும் நோக்கோடு அச்சவாலை ஏற்று முன்சென்ற பலர் தமது கட்டுப்பணத்தை இழக்க நேரிட்டது. எனினும் பிரபலமான எவரும் முன் வந்து அப்பரிசைப் பெற்றுக்கொள்ள முயலவில்லை. கோவூர் இறந்த பிறகு இந்திய பகுத்தறிவாளர் சங்கம் தொடர்ந்தும் இந்தச் சவாலை விடுத்துக்கொண்டே இருந்தது குறிப்பிடத்தக்கது.

புதிதாக ஒரு வீட்டில் குடியேறுவதற்கு (கிரகப் பிரவேசத்திற்கு) மிகவும் துரதிர்ஷ்டமான (அசுப) வேளையைக் கணித்துக் கூறுமாறு பிரபல ஜோஷ்யர்கள் பலரிடம் கோவூர் கேட்டுக்கொண்டாராம். அவர்களால் கணிக்கப்பட்ட ஓர் அசுப முகூர்த்தத்தில் ஒரு வீட்டில் குடியேறி அவர் வாழ்ந்து வந்ததாகச் சொல்லப் படுகின்றது.

ஆப்ரஹாம் கோவூர் hypnotherapy முறையையும் பிரயோக உளவியல் முறைகளையும் பயன் படுத்தி நூற்றுக்கணக்கானோரின் உள நோய்களையும் மனப் பிரமைகளையும் நிவர்த்தி செய்துள்ளார். இப்படி இவரிடம் வந்து சிகிச்சை பெற்றுக் கொண்ட நோயாளர்கள் பற்றி இவர் எழுதிவைத்திருந்த குறிப்பேட்டை அடிப்படையாக வைத்தே 'புனர் ஜென்மம்' என்னும் மலையாளத் திரைப்படமும் 'மறுபிறவி' என்ற தமிழ்த் திரைப்படமும் உருவாக்கப் பட்டன.

இவர் எழுதிய *'Begone Godmen', 'Gods, Demons and Spirits', 'Exposing Paranormal Claims'* ஆகிய நூல்கள் இன்றும் தேடி வாசிக்கப்படுகின்றன. இவரது ஆக்கங்களின் தொகுப்பொன்று *'Selected Works of A.T. Kovoor'* என்ற பெயரில் புது டில்லியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆப்ரஹாம் கோவூர் 1978 செப்டம்பர் 18ம் திகதி தனது 80வது வயதில் கொழும்பில் காலமானார். அவரது இறுதி விருப்பத்தின்படி அவரது கண்கள் இலங்கைக் கண் வங்கிக்குத் தானம் செய்யப்பட்டன. அவரது மரண அறிவித்தலில் அவரது பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுக் கொழும்பு மருத்துவக் கல்லூரிக்குக் கையளிக்கப்படும் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வாறே அது மருத்துவக் கல்லூரியின் உடற்கூறியல் பிரிவுக்குக் கையளிக்கப்பட்டது. உடற்கூறியல் கற்கைக்காக உடற்பகுதிகள் பயன் படுத்தப்பட்ட பின்னர் தனது எலும்புக்கூட்டை கொழும்பு தர்ஸ்டன் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குக் கொடுத்துவிடுமாறு கோவூர் தனது இறுதி விருப்பப் பத்திரத்தில் தெரிவித்திருந்தார். அவரது அந்த விருப்பமும் நிறைவேற்றப்பட்டது.

---


<u>அரும்பு பழைய பிரதிகள்</u>

அரும்பு 3, 23, 24, 25, 27, 28, 29, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40 என்பவற்றின் பிரதிகள் எமது கைவசம் உள்ளன. தேவையானவர்கள் அரும்பு ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

# பொது அறிவுப் போட்டி இல : 40

வாசகர்களே!

பின்வரும் பத்து வினாக்களுக்குமுரிய சரியான விடைகளைத் திருத்தமாக ஒரு தாளில் எழுதிக் **கடித உறையினுள்** இட்டுத் தபாலில் அனுப்பி வையுங்கள்.

*விடைத் தாளில் உங்கள் பெயர், முகவரி, மாணவராயின் பாடசாலையின் பெயர் என்பவற்றை விபரமாக எழுதத் தவறாதீர்கள்.*

எமது முகவரி பின்வருமாறு:

EDITOR - 'ARUMBU'
ROYAL COMPUTERS,
70, MAIN STREET,
DHARGA TOWN - 12090.

போட்டி முடிவுத் திகதி: 2007. 04. 31

கீழே தரப்பட்டுள்ள அரும்பு சின்னத்தை வெட்டி, விடைத்தாளில் ஒட்டி அனுப்பத் தவறாதீர்கள். இச்சின்னம் ஒட்டப்படாத விடைகள் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டா.

பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதியனுப்பும் வாசகர்களுள் அதிர்ஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஐவருக்குப் பணப் பரிசுகள் வழங்கப்படும்.

*முதற் பரிசு: ரூபா 500.00*
*இரண்டாம் பரிசு: ரூபா 300.00*
*மூன்றாம் பரிசு: ரூபா 150.00*
*4ம் 5ம் பரிசுகள்: ரூபா 100.00*

மேலும் 25 அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் அரும்பில் பிரசுரிக்கப்படுவதோடு அவர்களுக்கு அரும்பின் அடுத்த இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

அரும்பு பொது அறிவுப் போட்டி 40

## வினாக்கள்:

1. கடல் ஆமைகளுள் மிகப் பெரிய இனத்தின் விலங்கியற் பெயர் என்ன?
2. பாங்கொக் நகர் எந்த நதியின் கரையில் அமைந்திருக்கிறது?
3. தேங்காய் எண்ணெயில் காணப்படும் கொழுப்பு அமிலங்களுள் எமது உடல் ஆரோக்கியத்துக்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுவது எது?
4. கிளேமோர் கண்ணி வெடிகளை முதலில் தயாரித்து அறிமுகப்படுத்திய நாடு எது?
5. இலங்கையில் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட தினம் எது?
6. டாக்டர் அல்பேர்ட் ஷ்வைட்ஸர் எந்த நாட்டில் பிறந்தார்?
7. விகிபீடியா என்னும் இண்டர்னெட் கலைக்களஞ்சியத் திட்டத்தை ஆரம்பித்தவர்கள் யார்?
8. பஜாஜ் ஒட்டோ லிமிற்றட் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் யார்?
9. இலங்கை பகுத்தறிவாளர் சங்கத்தின் தலைவராக இருந்த ஆப்ரஹாம் கோவூர் இந்தியாவின் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?
10. போர்னியோ தீவிலுள்ள காடுகளில் காணப்படும் மனிதனை ஒத்த தோற்றமுடைய வாலில்லாக் குரங்குகள் என்ன பெயரால் அழைக்கப்படுகின்றன?

### அடுத்த இதழ்

அரும்பு இதழ் - 42
எதிர்வரும் 2007. 06. 15 ம்
திகதி வெளிவரும்.

# அரும்பு பொது அறிவுப் போட்டி – 39

## சரியான விடைகளும் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளும்

கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கான சரியான விடைகள் பின்வருமாறு:

**1.** Hugo Chavez
**2.** பிரெஞ்சு மொழி
**3.** ஜப்பான்
**4.** ருடொல்ப் டீசல் (Rudolph Diesel)
**5.** Children of Heaven
**6.** பொலீவியா (Bolivia)
**7.** மொஹமட் யூனூஸ்
**8.** *Caryota urens*
**9.** அவுஸ்திரேலியா
**10.** Microwaves (நுண்ணலைகள்)

இம்முறை மிகச் சிலரே சரியான விடைகளை அனுப்பியிருந்தனர். அவர்களுள் பரிசுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு:

1ம் பரிசு (ரூபா 500): **Fathima Shafeek,** Dematagahamulatenna, Akurana.

2ம் பரிசு (ரூபா 300): **A.R.M. Jameela Madahath,** "Jameela's", Nangalla, Thulhiriya

3ம் பரிசு (ரூபா 150): **A. Hawwa Umma,** Goragoya T.V., Hapugastalawa

4ம் பரிசு (ரூபா 100): **M.M.F. Naadhiya,** Mawathapola, Alawathugoda.

5ம் பரிசு (ரூபா 100): **M.M.F. Mishfa,** Mi-ella, Hakmana

ஆறுதல் பரிசாக அரும்பு 41 இதழைப் பெறுகின்றவர்கள்:

1. A.H. Siddeeka, Lane No.5, New Settlement Rd., Puttalam.
2. A. Muhammed Niyas, 311, Muruthagahamula-2
3. A.S.M. Aslam, Pahala Goraka Oya Muslim Vidyalaya, Nawalapitiya.
4. A.W. Waseema, Mi-ella, Hakmana.
5. F. Nehma Irshad, Colombo Rd., Old Town, Madampe
6. Rishda Sufiyan, Udupitiya, Ulapane.
7. M.M. Maleeha, Mosque Road, Hapugastalawa
8. M.N.M. Rashard, B-12/1, Mosque Road, Hapugastalawa
9. H.F.M. Faisal, Jamiah Naleemiah, P.O.Box:1, Beruwala.
10. M. Hiras Hijas, 23/28, Marikar Place, Maradana, Beruwala.
11. Zahfara Ajilan, Kapuwatta, Denipitiya.
12. Farsana Farook, Mangedara, Thulhiriya.
13. M.A.F. Hazra, Halawegoda Road, Mahagoda, Beruwala.
14. Fathima Nasrin, United Lane, Mawanella.

*அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்!*

# ஓசையும் உள ஆரோக்கியமும்

ஓசை அல்லது ஒலி மனிதனுக்கு இன்றியமையாததாகும். சிறு ஓசையைக் கூடக் கேட்க முடியாத நிலையில் ஒரு மனிதனை அடைத்து வைத்தால் சில தினங்களுக்குள் அவனது புத்தி பேதலித்து விடும். ஓசை மென்மையாகவும் இதமாகவும் இருக்கும் போது அது மனித உள்ளத்திற்கு அமைதியையும் ஆறுதலையும் வழங்க வல்லது. மாறாக அது உரத்ததாகவும், கர்ணகடூரமானதாகவும் அமைந்துவிட்டால் மனிதனின் மன அமைதி குலைந்து போவது மாத்திரமன்றி அவனது உள்ளத்தில் எரிச்சலும் விரக்தியும் முரட்டுத் தனமும் தோற்றுவிக்கப்படுகின்றன.

தற்போதைய சூழலில் எங்கு திரும்பினாலும் பலத்த ஓசைகளே கேட்கின்றன. பாதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளும் பாட சாலையில் படிக்கும் மாணவர்களும் நம்மை ஆள முயலும் அரசியல் வாதிகளும் இசையில் லயிக்கும் ரசிகர்களும் இறைவனைத் துதித்து அவனை வணங்க முயலும் பக்தர்களும் ஓசையின் பலத்தையே பெரும் பேறாகக் கருதும் அவலத்தை எங்கும் காண்கிறோம்.

இன்று மனிதர்கள் தத்தம் சமய வழிபாட்டுத்தலங்களில் ஏட்டிக்குப் போட்டியாய் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்திக்கொண்டு சமயத்தின் பெயரால் பெரும் ஓசைகளை எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். வலுமிக்க ஒலிபெருக்கி இல்லாமல் இறைவனைத் துதிபாடினால் அந்த வல்ல வனுக்குக் கேட்காமல் போய்விடுமோ என இந்த பக்தர் கூட்டம் பயப்படு கிறதா என நினைக்கவேண்டி இருக்கிறது.

இவ்வாறு உரத்த ஓசைகளுக்குப் பழகிப்போன மனிதர்களின் செவிப்புலன் தன் கூர்மையை இழந்துவிடும்; அவர்களது மெல்லுணர் வுகள் மரத்துப் போய்விடும். மனதை ஒருமைப்படுத்திச் செயற்படும் ஆற்றலை அவர்கள் இழந்து விடுவார்கள். அவர்களது உள்ளங்கள் அமைதியின் சுவையை உணர முடியாமல் சதா வெந்துகொண்டே இருக்கும். வெற்று ஓசைகளுக்கு முதலிடம் கொடுக்கும் சமூகத்தில் மக்களின் உள ஆரோக்கியம்தான் முதலில் பலியாகும்.

இத்தகைய சூழலில் வளரும் பிள்ளைகளும் உரத்த குரலே உயர்வைத் தரும் என எண்ணத் தொடங்குவார்கள். சத்தம் போட்டுப் பேசக்கூடியவர் களையே தம் வழிகாட்டிகளாய்க் கொள்வார்கள். அவர்களிடம் மென்மையையோ நளினத்தையோ காணமுடியாமற் போய்விடும்.

வெறும் பானைகள்தான் அதிக ஓசையை ஏற்படுத்தும் என்ற உண்மை தெரிந்திருந்தும் நாம் இந்த நிலைமைக்கு ஆளாகிக் கொண்டிருப்பது விந்தையிலும் விந்தைதான்.

PRINTED BY : A.J. PRINTS - 44, STATION ROAD, DEHIWALA